கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(21.07.2019 - 21 ஆடி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 212, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

புனித அன்னம்மாள் திருவிழா 26.07.2019





பக்கம் 05

சூழலை வெல்வோர் இளையோர்



பக்கம் 08 - 09

'நீங்கள், நீங்களல்ல கிறிஸ்துவே'



பக்கம் 14

ஒளி வீசும் விண் மீன்!!

# மறைப்பணியாளருக்காகச் செபிப்பது நம் கடமை

– திருத்தந்தை



**இயேசு வழங்கிய அறிவுரைகளைப் பின்பற்றும் மறைப்பணியாளர்கள், இயேசுவின் சீடர்களைப்போல் மகிழ்வுடன் திரும்புவர், அவர்களது பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்படும்**

"இவ்வுலகில் பணியாற்ற வேலையாளர்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுவோம்" உலகில் சென்று நற்செய்தியை அறிவிப்பதற்கு தன் பன்னிரெண்டு திருத்தூதர்களுடன் மேலும் 72 சீடர்களை இயேசு அனுப்பிய நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகளுக்கு மூவேளை செபத்தில் இதை மையக்கருத்தாகக் கூறினார்.


மறைப்பரப்பாளர்களின் பணியானது செபத்தை எவ்வாறு அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதையும், எவ்வாறு தன் சீடர்கள் ஏழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும், அமைதியையும், குணப்படுத்தலையும் வலியுறுத்துவதாக இன்றைய நாள் வாசகம் அமைந்துள்ளது என்று எடுத்துரைத்தார்.

ஆகவே இயேசு வழங்கிய அறிவுரைகளைப் பின்பற்றும் மறைப்பணியாளர்கள் இயேசுவின் சீடர்களைப் போல் மகிழ்வுடன் திரும்புவர். அவர்களது பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்படும் என்பதையும் வலியுறுத்திக் கூறினார் திருத்தந்தை.

**"ஆடி மாதம் முழுவதும் உங்கள் பங்குத் தந்தையர்களுக்காக விஷேடமாக செபியுங்கள்"**

**என திருத்தந்தை அவர்கள் கத்தோலிக்க மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

## வருந்துகின்றோம்.



**அருட்தந்தை பென்சிறி பெரேரா அடிகளார்**

ஆடி மாதம் 9ம் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரிகை இம் மாதம் 11ம் திகதி நடைபெற்றது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பார ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.



யாழ் மறைமாவட்ட **அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார்**

ஆடி மாதம் 11ம் திகதி இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரிகை இம் மாதம் 15ம் திகதி நடைபெற்றது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பார ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.

## இளைய தலைமுறையினருக்கு ஆங்கில அறிவு அவசியம்

**கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகைதெரிவிப்பு**



இந்நாட்டு இளைய தலைமுறையினரை ஆங்கில அறிவில் வளர, அக்குவயினஸ் கல்வியகம் முன்னெடுக்கப்படும்! என கொழும்பு அக்குவயினஸ் உயர் கல்வியக வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை தெரிவித்தார்கள். உலக விடயங்களை அறியவும், விஞ்ஞான தொழில் நுட்பத்தில் உலகை எதிர்கொள்ளவும் ஆங்கில மொழி அத்தியாவசியமாகும். இதை உலகம் மாத்திரமல்ல எமது நாடும் ஏற்றுக்கொண்டுள்ளது. எமது நாட்டு இளையோருக்கு ஆங்கில அறிவை வளர்க்க உயர் கல்வியகங்களில் அக்குவயினஸ் உயர்கல்வி நிலையத்திற்கு உயர்ந்த இடமுண்டு என்றார். டிப்ளோமா சான்றிதழ் பெற்ற..

15

## ஆவணி மாத மடு அன்னையின் திருவிழா



ஆவணி மாதம் 15ம் திகதி மருதமடு திருத்தலத்தில் மடுஅன்னையின் திருவிழா அதாவது அன்னையின் விண்ணேற்பு விழா இவ்வருடமும் வழமைப் போல் கொண்டாடப்படுகிறது.

இத்திருவிழாவை முன்னிட்டு 6ம் திகதி கொடியேற்றப்பட்டு 9 நாட்கள் நவநாட்கள் நடைபெறும். 14ம்திகதி மாலை 7 மணிக்கு மாலை ஆராதனையும் அடுத்த நாள் 15ம் திகதி திருவிழாவும் கொண்டாடப்படுகின்றது.

**கவனத்திற்கு:** பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடனும் பாதுகாப்புடனும் இத்திருவிழா கொண்டாடப்படும். மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான செயல்பாட்டுக்கு பொது மக்கள் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**– மன்னார் ஆயர்**


## பாப்பரசரின் கலந்துரையாடல் ஆணைக் குழுவின் செயலாளர்



பதுளை மறைமாவட்டத்தின் அருட்தந்தை இந்துனில் ஜனகரத்ன அடிகளார் பாப்பரசரின் "கலந்துரையாடல் ஆணைக் குழுவின்" செயலாளராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். அருட்தந்தை இந்துநில்...

02

**ஆயர் திருநிலைப்படுத்தல் ஆண்டுவிழா**



**திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு. நொயல் இம்மானுவேல் ஆண்டகை தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளை இம்மாதம் 25ந் திகதி நினைவுகூறுகின்றார். இவர் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.**

## அறிவித்தல்

பாஸ்கு ஞாயிறு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேகரிக்கப்பட்ட நிதி ரூபா 71,398,22447.00 அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் 352 குடும்பங்களுக்கு செலவழிக்கப்பட்டுள்ளது

**தகவல் : அருட்பணி. லோறன்ஸ் ராமநாயக்க செத்சரண இயக்குனர். கரிட்டாஸ் – கொழும்பு.**

## எமது வாழ்வின் பயணம் விண்ணுலகை நோக்கியே செல்ல வேண்டும்.

கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. J.D. அந்தனி ஆண்டகையினால் கொழும்பு-சிலாபம் புதிய வழி பாலம் அருகில் புதிதாக நிறுவப்பட்ட புனித அந்தோனியார் திருச்சுரூபம் அர்ச்சிப்பு செய்து வைக்கப்பட்டபோதே அவர் 'எமது வாழ்வின் பயணம் விண்ணகத்தை நோக்கியே செல்ல வேண்டும் என்று கூறினார். அதன்பின்பு கொட்டும் மழையில் ஆசீர்வாதம் வழங்கினார்.



**ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்? (தி.பா 15)**

## அடிப்படைவாத நோக்கத்தையும், மதவாதத்தையும் புறந்தள்ளி உண்மையைச் சொல்ல இந்நேரத்தைப் பயன்படுத்த வேண்டும்;



அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரோமையில் லௌறண்டினாவில் உள்ள மரியன்னை திருத்தலத்தில் நடைபெற்ற திருப்பலியின் போதே இவ்வாறு உரைத்தார் அவர் தொடர்ந்தும் கூறுகையில், 'உண்மையைச் சொல்ல இந்நேரத்தைப் பயன்படுத்த வேண்டும், அடிப்படை வாத நோக்கம், மதவாதிகளின் அப்பாவி மக்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டுள்ளது. இலங்கை மக்கள் இந்த அனர்த்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான இனவாதிகளின் செயல்பாடு என்றும், எங்கும் நடைபெறாமல் விழிப்பாக இருக்க வேண்டும். இந்த அடிப்படை வாதிகளையும் மதவாதிகளையும் வளர்த்தெடுப்பவர்களையும் முழுமையாக அகற்ற வேண்டும். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக பௌத்த நாகரீகத்தில் வளர்ந்த தாய் நாடு, சகல மதங்களையும் மதிக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய இலங்கையை உருவாக்க அர்ப்பணிக்க வேண்டும் என கொழும்பு பேராயர் அதி.மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரோமையில் குடியேறியவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட திருப்பலியின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

## கொழும்பு உயர் மறைமாவட்ட குருமுதல்வர்களின் நியமனங்கள்

1. அதி.வண. அருட்பணி. ஹகியோன் நோனிஸ் பங்குத்தந்தை புனித. பேதுரு ஆலயம், நீர்கொழும்பு — நீர்கொழும்பு மறைக்கோட்டம்
2. அதி.வண. அருட்பணி. போதியாபதுகே டெரன்ஸ் பர்னாந்து பங்குத்தந்தை புனித. மரியாள் ஆலயம், போலவளான — நீர்கொழும்பு – கிழக்கு மறைக்கோட்டம்
3. அதி.வண. அருட்பணி. இந்திர ரட்ணசிறி பர்னாந்து பங்குத்தந்தை புனித பிலிப் நேரியார் ஆலயம், களமுல்ல, களுத்துறை — களுத்துறை மறைக்கோட்டம்
4. அதி.வண. அருட்பணி. ரவின் சந்திரசிறி பெரேரா பங்குத்தந்தை புனித. பிரான்சிஸ் சேவியர் ஆலயம், ஹல்பே, கட்டான — கட்டான மறைக்கோட்டம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் இந்நியமனங்கள் 15.07.2019 அன்று வழங்கப்பட்டன.

**தகவல் : அருட்பணி. டெனிஸ்டன் சுபசிங்க – செயலாளர்.**

## மடு மாதா திருவிழா அவுஸ்திரேலியா சிட்னியில்



மடு மாதா திருவிழா அவுஸ்திரேலியா சிட்னியில் வசித்து வரும் இலங்கையின் யாழ்ப்பாண சில்லாலை பங்கு வாசிகள் அனைவரும் ஒன்று கூடி மருதமடு மாதாவின் திருவிழாவைக்கொண்டாடினர். இத்திருவிழாவைச் சிறப்பிப்பதற்கு சிட்னி வாழ் இலங்கை மக்களால், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை சிட்னி வாழ் இலங்கை மக்களுடன் இணைந்து மடுமாதா திருவிழாவை சிறப்பித்தார்.

**தகவல் : S.B டேவிட்**



கிறேன்பாஸ் புனித ஜோசப் கல்லூரியின் 150வது ஆண்டு விழாவின்போது அதிபர் அருட்சகோதரர் ஜெயகாந்தன் அவர்களிடமிருந்து, அதி. வண. பெற்றிக் பெரேரா அவர்கள் ஆண்டுவிழா பட்டியல் பெற்றுக்கொள்வதை இங்கு காணலாம்.

## தூவ பிரதேச சிந்தாசிறி படகு திருவிழா இம்முறை எளிமையாக...!



நீர்கொழும்பு தூவ பிரதேசத்தின் தூவ பிரதேச சிந்தாசிறி மாதா ஆலய திருவிழாவின் போது ஒவ்வொரு வருடமும் படகு ஊர்வலம் நடைபெறும். ஆனால் இம்முறை ஜூலை மாதம் 21ம் திகதி திருவிழா வருவதால் அன்றைய தினம் பாஸ்கு ஞாயிறு அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் என்பதால் இத்திருவழா படகு ஊர்வலம் தவிர்க்கப்பட்டு திருவிழா திருப்பலி மாத்திரம் நடைபெறும் என அப்பிரதேச வாசிகளால் கூறப்பட்டது.

## அருட்தந்தை பென்சிறி பெரேரா அடிகளாரின் இறுதி அஞ்சலி

அருட்தந்தை பென்சிறி பெரேரா அருட்பணியாளராகவும், இசை கலைஞராகவும் பணியாற்றியவர். அவர் தனக்குரிய பங்கை உயர்வாக நிறைவேற்றினார்! என அன்னாரின் இறுதி அஞ்சலியின் போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறினார்கள்.

1966ல் அருட்பொழிவு பெற்று, இலங்கையில் அனைத்து பங்குகளிலும் இன்றும் அவரின் பாடல்கள் இசைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என கடந்த சனிக்கிழமை களணி பிலபிட்டு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் அருட்தந்தை பென்சிறி பெரேரா அவர்களின் இறுதி திருப்பலி அஞ்சலியின்போது தெரிவித்தார்கள்.



அவர் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இறை விருப்பத்திற்கு தலைவணங்கும் அருட்தந்தையாகவே கண்டேன். தனது கடமைகளை சரிவர நிறைவேற்றி, முடிந்தளவு இறைவிருப்பத்தைத் தேடி அதன்படி வாழ முயற்சித்தார். அருட்பணியாளர் சங்கத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் செயல்களுக்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்தவர். கொழும்பு ஆயர் இல்ல துணை ஆயர்களான ஜே.டி. அன்ரனி ஆண்டகை, மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையும் இந்த திருப்பலியில் கலந்துக்கொண்டார்கள். ஓய்வு பெற்ற பேராயர் ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகையும் ஆயர் இல்ல அருட்பணியாளர்கள் பலரும் கலந்துக் கொண்டனர்.



கட்டானை புனித பிலிப்பு நேரியார் தமிழ் மறைப்பாடசாலையின் இவ்வருடத்திற்கான புதிய மாணவத் தலைவர்கள் 2019.06.09ம் திகதியன்று பங்குத்தந்தையர்கள், மறையாசிரியர்கள் மற்றும் பங்குமக்கள் முன்னிலையில் பொறுப்பேற்றனர். மாணவத் தலைவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

**தகவல் : அருட்பணி. ரஞ்சித் லியனகே**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

01 பாப்பரசரின்...

ஜனகரத்ன கொடித்துவக்கு அவர்கள் ஜூலை மாதம் 03ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் திருத்தள கலந்துரையாடல் ஆணைக்குழுவின் செயலாளாக நியமிக்கப்பட்டார். 52 வயதான அருட்தந்தை, 2012ம் ஆண்டு தொடக்கம் திருத்தல உதவி செயலாளராக பணியாற்றினார். 2000ம் ஆண்டு டிசம்பர் 16ம்திகதி திருநிலைப்படுத்தப்பட அவர் இரண்டு வருடங்களின் பின் உரோமையில் மேலதிக கல்விக்காக சென்றார். அங்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு பின்பு 2012 ஆடி 12ம் திகதி திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களினால் கலந்துரையாடல் ஆணைக்குழுவின் உதவி செயலாளராக நியமிக்கப்பட்டார்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
21 ஆடி, 2019 ஞாயிற்றுக்கிழமை.


# பிள்ளைகளை இந்த மேன்மையான தேவ அழைப்பை பெற மனமுவந்து அனுப்புங்கள்.

எமது பரிசுத்த திருச்சபையானது இம்மாதத்தில் தேசிய குருக்கள், துறவிகள் தினத்தையும், புனித யாகப்பர் மற்றும் புனித சுவக்கீன், புனித அன்னம்மாள் ஆகியோரின் திருநாட்களையும் நினைவுகூர்கிறது. குருக்கள் துறவிகள் என்பவர்கள் இறைவனுக்கு சேவை புரிவதையே முழு மூச்சாகக் கொண்டு வாழ தனது ஆளுமை, சக்திகள் செயல்கள் யாவற்றையும் “இறைவனுக்கே சொந்தம்” என்று வாழத் தெரிந்தவர்கள்.

அர்ப்பண வாழ்வு, இயேசுவுக்கு சாட்சியம் பகரும் வாழ்வு, மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மக்கள் கடவுளை மறந்து வெகு தொலைவில் விலகிச் சென்று கொண்டிருக்கின்ற இக்காலத்தில் துறவியர்கள், குருக்கள், தங்கள் அர்ப்பண வாழ்வை, புதுப்பணிகளை சவால்களுக்கேற்ப புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல உறக்க நிலையில் உள்ள உலகைத் தங்கள், வார்த்தைகளால் அல்ல சாட்சிய வாழ்வினால் கட்டியெழுப்ப வேண்டும். துறவற குருத்துவ வாழ்வு இலக்கற்ற பொறுப்பற்ற வாழ்வு அல்ல, மாறாக தனது இன்ப, துன்பம் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இறைவனில் ஏழைகளுக்கு ஆற்றும் பணியில் மகிழ்வைக் காணத் துடிக்கும் வாழ்வாகும். என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துறவறத்தைப் பற்றி குறிப்பிடுவதை காணலாம்.

மேலும் “நான் ஒரு குருவையும், தேவ தூதனையும் ஒரே சமயத்தில் சந்தித்தால், குருவுக்கு முதலில் வணக்கம் செலுத்துவேன். ஏனென்றால் தேவதூதன் கடவுளின் அன்பன் மட்டுமாகும். குருவோ கடவுளுக்குப் பதிலாக உள்ள ஆள்” என்று புனித அசிசிரியார் கூறுகிறார்.

எனவே குருக்கள் துறவிகளின் மேன்மையை அறிந்து அவர்களுக்கு மரியாதை செலுத்தி, எமது நாளாந்த செபத்தில் அவர்களையும் நினைவுகூர்வோம். அவர்களது தேவைகளில் அவர்களோடு இருந்து அவர்களுக்கு எம்மாலான சகல உதவிகளையும் செய்ய முன்வருவோம். சுதேச குருக்கள் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், பெற்றோர்களே, உங்கள் குடும்பங்களில் இருந்து பிள்ளைகளை இந்த மேன்மையான தேவ அழைப்பை பெற மனமுவந்து அனுப்புங்கள். உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக மாறும்.

மேலும் புனித யாகப்பர், மற்றும் புனித சுவக்கீன், புனித அன்னம்மாள் ஆகியோரின் வாழ்வும் திருச்சபையினராகிய எமக்கு சிறந்த எடுத்துக்காட்டான வாழ்வாக அமைகின்றது. எனவே தான் இன்று இறைமக்கள் இவ்வாலயங்களுக்கு நம்பிக்கையோடும் பக்தியோடும் சென்று வருவதையும், எந்தவித சிரமங்களையும் பாராது திருயாத்திரை செல்வதையும் எம்மால் காண முடிகிறது.

தூய சந்தியாகப்பர் தனது உடல், பொருள் ஆவி அனைத்தையும் இயேசு என்ற நற்செய்திக்காக அர்ப்பணித்தார். தனக்கென எதையும் தனியாக ஒதுக்கி வைக்கவில்லை. தனது எல்லாவற்றையும் இயேசு என்ற நற்செய்திக்காக இழக்கத் தயாரானார். புனித சுவக்கீன் அன்னம்மாள் இருவரும் மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள், இறைவனின் முன்னிலையில், தாழ்ச்சியுள்ளவர்களாகவும், மனிதர்களின் முன்னிலையில் எதுவித அப்பழுக்கற்ற நேர்மையாளர்களாகவும் திகழ்ந்தார்கள். இதனால் தான் உலகினரின் தாயான அன்னை மரியை பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்றார்கள். எனவே நாமும் இவர்களது வாழ்க்கையின் முன்மாதரிகைகளைப் பின்பற்றி வாழ முயற்சிப்போம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# ‘நீங்கள், நீங்களல்ல கிறிஸ்துவே’

**அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி**

திருச்சபையில் ஒவ்வொருவரும் பல்வேறு வரங்களை அவரவர் அழைப்பிற்கேற்ப பெறுகின்றனர். அவரவர் பெற்ற அழைப்பிற்கு ஏற்றவாறு இறைவனின் ஆவி கொடைகளை வழங்குகின்றார். வருகிற ஞாயிறு தினம் சுதேச குருக்கள், துறவிகள் தினத்தை கொண்டாடுகின்றோம். நம் இலங்கை மண்ணில் இருந்து, நாம் வாழும் பங்குகளில் இருந்து, குருத்துவ துறவற வாழ்வுக்காக இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட இவர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறி, மன்றாட வேண்டிய ஓர் சிறப்பு நாளாகும். இன்று மாத்திரமல்ல, நாம் தினமும் இவர்களுக்காக மன்றாட மறக்கக் கூடாது.

## மண்ணில் மடியும் வித்தாக...

இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கால் இயேசுவின் குருத்துவத்தில் பங்கேற்று இயேசு போல உலக மீட்புக்காக தங்களையே வழங்க அழைக்கப்பட்டாலும் குருக்களைப் பொறுத்தவரையில் இதுவே அவர்களது உடனடிக் கடமையும், சிறப்பு அழைப்புமாக அமைகிறது. குருக்களின் இலக்கு இயேசு கனவு கண்ட இறையரசு, உலக மீட்பு, குருக்களின் வழி இயேசுவின் தியாக வழி, இறையரசின், இயேசுவின் பணியாளர்கள் என்பதே அவர்களின் அடையாளத்தன்மை” மாற்கு 10”44-45 என்ற இயேசுவின் வார்த்தைகள் இயேசுவைப் பின்பற்றும் சீடத்துவம், குருத்துவம் எப்படிப்பட்டது என்பதை தெளிவாகக் காட்டுகின்றன. இறையரசின் பணியாளராக, இயேசுவின் வழியில் உலகைப் புனிதப்படுத்தி, அருளடையாளங்களை நிறைவேற்றி, குறிப்பாக நற்கருணை புகழ்ச்சிப்பலியை இறைவனுக்கு அன்றாடம் செலுத்தி, கிறிஸ்துவின் பாதையில் நடந்து, இறுதியில் அவரைப் போன்று உலக மீட்புக்காக பலியாகுவதே குருக்களின் அழைப்பாகும்.

## துறவு பூண்டவர்களாக...

“இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகளை இதயத்தில் தாங்கி இயேசுவின் வாழ்க்கையை வாழ முடிவெடுத்துத் தோன்றியது துறவு வாழ்வு முறை. துறவு வாழ்வென்பது என்ன? தொமினிக்கன் சபை துறவி, புனித பிலிப் நேரி பவுல் பின்வருமாறு கூறுவார் “துறவறக் குழுமமானது, தூய ஆவியாரால் ஒன்றாக அழைக்கப்பட்ட பெண் அல்லது ஆண் குழுக்கள், தங்களுடைய வாழ்வை ஒருவர் மற்றவர்க்கு வழங்கவும், சுதந்திரமான, கீழ்ப்படிதலிலும், எளிமையான, ஏழ்மையிலும், மணத்துறவின் மையமான கற்பிலும் தங்கள் உறுதிப்பாடுகளின் வழியாக கடவுளுக்குப் பணியாற்றுவதே துறவு வாழ்வாகும்” ஆக, ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் என்னும் மூன்று வார்த்தைப் பாடுகளின் மூலம் புடம் போடப்பட்ட, தூய ஆவியாரால் உந்தப்பட்ட வாழ்வே உண்மையான துறவு வாழ்வாகும். துறவிகள் தொடர்ச்சியாக தம் வாழ்வை புதுப்பித்துக் கொண்டே துறவு வாழ்வாகும். துறவிகள் தொடர்ச்சியாக தம் வாழ்வை புதுப்பித்துக் கொண்டே இருக்கவேண்டும். நமது அடிப்படை நெறி மற்றும் மாற்ற முடியா துறவு வாழ்வின் விதியும் இயேசுவைப் பின்பற்றதில் தான் உள்ளது. வரலாற்றின் ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும். இயேசுவின் நற்செய்தியை மையமாகக் கொண்டு நம் துறவு சபைகளின் சிறப்புத் தனி வரத்தோடும், இறைநம்பிக்கையோடும் துறவு வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். எனவேதான், “அர்ப்பணிக்கப்பட்டோர் இவ்வுலகை விழித்தெழச் செய்வர்” என்று திருத்தந்தை பிரான்சிஸ் துறவிகளைப் பற்றி கூறுகின்றார். ஒவ்வொரு துறவுச் சபைக்கும் வழங்கப்பட்டுள்ள தனி வரங்களின் அடிப்படையில் இவ்வுலகை மாற்றுபவர்களாகவும் மாறுபட்ட உலகை உருவாக்கவும் துறவிகள் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

## தற்கால சிக்கல்கள்...

இன்று நம் இலங்கைத் தீவில் குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் ஒத்துழைப்புடன், இணைந்து இறையரசின் மேம்பாட்டுக்காக உழைப்பது காலத்தின் கட்டாயத் தேவையாகும். நம்மை இணைத்து ஓர் குழுமமாக செயல்படுவதற்கு தடையாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு அவைகளை களைய வேண்டும்.

(அ) குருக்கள் மற்றும் துறவிகள் தங்களிடையே நல்ல பரஸ்பர புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குருக்கள் துறவிகளையோ, துறவிகள் குருக்களையோ அச்சுறுத்தலாக கருதக்கூடாது. இவர்கள் மட்டில் இருக்கும் போட்டி மனநிலை, களையப்படவேண்டும். நமது இலக்கு இயேசுவின் இறையரசு கனவு நனவாக்குவதே. ஆகவே இப்பயணத்தில் நாம் சமபங்காளிகள் என்பதனை மனதில் இருத்தவேண்டும்.

(ஆ) கிறிஸ்துவின் போதனைப்படி தலைமைத்துவம் என்பது தொண்டிற்கான அங்கீகாரம்... ☛ 15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# உன்னை நான் சந்தித்தால்...!

மனிதன் என்பதன் அர்த்தம் அவன் பிறரோடு கொள்கிற உறவிலே, தொடர்பிலே வெளிப்படுகிறது. மனிதன் என்பவன் ஒருபோதும் தனித்து இயங்குபவன் அல்ல. அவன் கொள்கின்ற உறவில், தொடர்பில் தான் அவனது பிறப்பின் பயன் நிறைவு பெறுகிறது.

வள்ளுவப் பெருந்தகைகூட உறவு பற்றிப் பேசும்போது,

**அளவளா(உறவு) வில்லாதான் வாழ்க்கை குளவனாக்**

**(குளம்) கோடின்றி(கரை) நீரின்றித் தற்று என்பார்.**

குளத்திலே தண்ணீர் நிறைந்திருக்க வேண்டுமெனில் குளத்திற்குக் கரை அமைக்க வேண்டும். கரையில்லாத குளத்தில் தண்ணீர் தேக்கி வைக்க இயலாது. அதுபோல் உறவு கொள்ள இயலாதவனது வாழ்வும் கரையில்லாத குளம்போல வெறுமையாக இருக்கும் என்பது வள்ளுனர் கருத்து.

***மனித உறவு நிலையில் அடிப்படையானவை நான்கு***

1. மனித - இறை உறவு
2. மனித - அகில (பிரபஞ்சம்) உறவு
3. மனித - மனித உறவு
4. மனித - இயற்கை உறவு

மேற்கூறப்பட்ட உறவுகள் எல்லா மனிதருக்கும் பொதுவானவை. ஆனால், இறையடியார்களுக்கு இறை உறவு கூடுதலாக இருக்க வேண்டும். மெய்யடியார்கள், ஞானிகளுக்கு அகிலத்துடனான உறவு மிகுந்திருக்க வேண்டும். அறிவியலாருக்கு இயற்கையுடனான உறவு அதிகமாக இருக்க வேண்டும். மாந்தர் அனைவரும் மனித உறவுப் பாலங்கள் அமைப்பதில் கருத்தாயிருக்க வேண்டும். இந்த நான்கு உறவு நிலைகளையும் சமன் செய்யக் கற்றுக்கொண்டவர்களே மனிதருள் மாணிக்கங்களாக உலகில் விளங்குகின்றனர்.

இயேசுவின் மனிதப் பிறப்பின் அடிப்படை நோக்கமே மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே உறவுப் பாலம் அமைப்பது; இறை-மனித உறவை ஆழப்படுத்துவது; மனிதன் தனது தவறான அணுகு முறையால் இழந்த உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள உதவுவது; இதன் மூலம் மனிதனை, மனித-அகில உறவுக்கு, மனித - இயற்கை உறவுக்கு, மனித - மனித உறவுக்குத் தயார்ப்படுத்துவது.

இறை - மனித உறவு என்பது சர்வ சாதாரணமானது அல்ல. மலையேறி மலைத்தேன் பருகுவதற்குச் சமமானது. மலைத்தேன் குடிக்க மலையேறுகிறவன் கடுமையான முயற்சி எடுக்க வேண்டியிருப்பதுபோல, இறை - மனித உறவைப் பலப்படுத்த மனிதனும் கடுமையான முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இறை உறவு என்கிற சுவையான மலைத்தேனைச் சுவைக்க முடியும்.

தேனை மனிதன் முயற்சி செய்து கண்டுபிடிக்கு முன் தேனீக்கள் கடினமாக உழைத்து உயர் ரக கொம்புத்தேனைச் சேகரித்து வைக்க வேண்டியுள்ளது. அதுபோல இறை - மனித உறவில் இறைவனும் முதன் முதலில் தனது உறவுக் கரத்தை மனிதனை நோக்கி நீளச் செய்கிறார். இறை - மனித உறவுக்கு இறைவனது முயற்சியும் அத்தியாவசியமானது.

இத்தாலிய ஓவியன் மைக்கல் அஞ்சலோ வத்திகானில் உள்ள சிஸ்டைன் சிற்றாலயத்தின் மேற்கூரையில் வரைந்த தனது ஓவியத்தில், தந்தையாகிய இறைவனது சுண்டுவிரலும், ஆதாமின் சுண்டுவிரலும் ஒன்றை ஒன்று தொட முயற்சிப்பது போல அமைத்திருக்கிறார். இறை - மனித உறவில் இறைவனும், மனிதனும் எடுக்க வேண்டிய முயற்சியை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

மனிதன் ஓரடி எடுத்து வைத்தால் தெய்வம் ஓடிவந்து அரவணைக்கும். இறை - மனித உறவில் இறைவனே முதல் முயற்சி எடுக்கிறார். அவரே முதல் அடி எடுத்து வைக்கிறார். இறைவன் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு காலடித் தடமும் இறை - மனித உறவின் மைல் கல்லாக அமைந்து விடுகிறது.

இறை - மனித உறவுக்காக இறைவன் எடுத்த முத்திரை பதிக்கத்தக்க முயற்சி இயேசுவின் மனு உருவெடுத்தல், இயேசுவின் பிறப்பால் இறை - மனித உறவின் அவலங்க ளெல்லாம் நீக்கப்பட்டன. உறவின் விரிசல்களெல்லாம் சரிசெய்யப்பட்டன. உறவின் காயங்களெல்லாம் குணமாக்கப்பட்டன.

நான்கு நற்செய்தியாளர்களும் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) இயேசு - மனித உறவின் பல்வேறு முகங்களை நமக்கு அடையாளம் காட்டுகின்றனர். இயேசுவைச் சந்திக்கும் ஒவ்வொருவரும் நற்செய்தி காட்டும் இறை - மனித வரலாற்றுப் புத்தகத்தின் அத்தியாயமாக மாறிவிடுகின்றனர்.

இயேசு - திருமுழுக்கு யோவான் சந்திப்பிலிருந்து இறை - மனித உறவின் முதல் பாடம் தொடங்குகிறது என்றால் அது மிகையாகாது. இதை உணர்ந்ததால்தான் என்னவோ மாற்கு, லூக்கா யோவான் ஆகிய மூன்று நற்செய்தியாளர்களும் இயேசு - திருமுழுக்கு யோவான் பற்றிய பாடத்தை நமக்கு முதலில் அமைத்துத் தருகின்றனர்.

காதலில் எப்படி தெய்வீகக் காதல் என்று உண்டோ, அதே போல் உறவிலும் தெய்வீக உறவு உண்டு. இயேசு - திருமுழுக்கு யோவானின் உறவைத் தெய்வீக உறவு என்று குறிப்பிடுவதைவிட வேறு எப்படிக் குறிப்பிட முடியும். பெற்றோர் - பிள்ளைகள் உறவை சகோதர பாசத்தை, நண்பர் நட்பை, உற்றார் - உறவினரின் பந்தத்தைப் பல நேரங்களில் கொச்சைப்படுத்திப் பார்க்கும் சமூகத்தில் வாழும் நமக்கு இயேசு-திருமுழுக்கு யோவானின் உறவு ஒரு மாதிரிப் பாடம்.

இறை - மனித உறவின் முதல் கூறு மகிழ்ச்சி இயேசுவும் திருமுழுக்கு யோவானும் சந்திக்கும் முதல்கட்டமே மகிழ்ச்சியின் உச்சக்கட்டம் (புனித லூக் 1:39-45) இயேசுவின்தாய் மரியாவின் வாழ்த்துரை கேட்டு எலிசபெத்தின் கருவறையில் இருந்த திருமுழுக்கு யோவான் மகிழ்ச்சியால், பேருவகையால் துள்ளியதாக (புனித லூக் 1:41,44) லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார்.

**பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?**

(புனித லூக் 1:42-43) என்று எலிசபெத்து மரியாவை வாழ்த்தியபோது மரியாயின் கருவறையில் இருந்த இயேசுவும் பெருமகிழ்வால் நிச்சயமாக துள்ளிக் குதித்திருக்க வேண்டும். கருவறையில் இருந்தபோதே இயேசுவும் திருமுழுக்கு யோவானும் உறவைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பதை புனித லூக்கா நற்செய்தியாளர் மரியா - எலிசபெத்து சந்திப்பின் மூலம் நமக்கு படம்பிடித்துக் காட்ட விரும்புகிறார் என்றே கூற வேண்டும். இப்பகுதிக்கு மரியா - எலிசபெத்து சந்திப்பு என்று தலைப்புக் கொடுப்பதைவிட இயேசு - திருமுழுக்கு யோவானின் சந்திப்பு என்று தலைப்புக்கொடுத்திருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும். பிள்ளைப் பேற்றிற்காகக் காத்துக்கொண்டிருக்கும் பெண்கள் எத்தகைய சூழலில் எப்படிப்பட்ட மனநிலையில் இருக்க வேண்டும் என்பதற்கு மரியா-எலிசபெத்து இருவரின் மனநிலை, அவர்களது மகிழ்ச்சியான சூழல் நல் எடுத்துக்காட்டு. இசை கேட்கும் மகிழ்வில் பசுவுக்குக் கூட அதிகமாக பால் சுரக்கும் என்கிறது நவீன அறிவியல். பேறுகால நேரத்தில் பெண் மகிழ்ச்சியான சூழலில் இருக்க வேண்டும் என நினைத்து ஏழாம் மாதத்தில் வளைக்காப்பு நிகழ்வு நடத்திப் பெண்களைத் தாய்வீட்டுக்கு அனுப்புவது பாட்டியார் தத்துவம்.

ஆனால் மாமியாரின் இடிப்புரை, நாத்தனாரின் ஏச்சு,கைப்பிடித்தவரின் கரிசனையின்மை, அலுவலக எந்திரத் தன்மைகள், வரதட்சனைப் பயங்கள் போன்றவை தான் குழந்தைப் பேற்றை எதிர்பார்க்கும் பெண்களுக்கு கருவறையில் முடங்கிக் கிடக்கும் சிசுக்கும் இன்று சந்திக்கும் பிரச்சனைகள். குழந்தைப் பேறுக்காக்க காத்திருக்கும் பெண்களே மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டு...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**இறை – மனித உறவு என்பது சர்வசாதாரணமானது அல்ல. மலையேறி மலைத்தேன் பருகுவதற்குச் சமமானது. மலைத்தேன் குடிக்க மலையேறுகிறவன் கடுமையான முயற்சி எடுக்க வேண்டியிருப்பதுபோல, இறை – மனித உறவைப் பலப்படுத்த மனிதனும் கடுமையான முயற்சி எடுக்க வேண்டும்**

## கவிதை துணுக்குகள்...





**பிரிவு**

உண்மையான அன்பைப்

புரிந்துக் கொள்ளும் ஒரு

சந்தர்ப்பம்

பிரிவு

**பணம்**

பணமில்லாததால் மனிதனாக

மதிக்கவில்லை கவலைப்படாதே – நீ

தொடர்ந்து மனிதனாக இரு



**தவறு**

தவறுகள் செய்திடின் தயங்காதீர்,

தன்னிலை உணரும்

தருணம் அதுவே! தவறை

திருத்திட அஞ்சாதீர்,

தரணியில் உயர நல்வழி

அதுவே!!


**அமைதி**

பேச வேண்டிய நேரங்களில்

அமைதியாக இருந்து விட்டால்

அமைதியான நேரங்களில்

நிம்மதியாக இருக்க முடியாது.



## இறைவா நீர் உடனிருந்தீர்...



விபத்து–ஐயோ பெரும் விபத்து!

அதுவும் நம் கண் முன்னே; ஆனந்தம் பேரானந்தம் அது தரும்,

இறைவா உம் நந்தவனத்திலே...

உயிர்த்த இயேசுவே நீர் கைவிடவில்லை!

அசையாமல் நீர் தாமே இருந்தீர் அவ்வாலயத்திலே

இறைவா உம் உடலிலும் இரத்தம் தோய்ந்ததே!

காட்டுகின்றதே அது உம் அன்பு உள்ளத்தையே!!

உயிரைக் கொடுத்தார்கள் எமக்காகவே,

மற்றவர்கள் வேதனைகள் உமக்காகவே,

சிலுவையை சுமந்தே பயனித்தனரே!

இறைவா! அவர்கள் என்றும் உம் குழந்தைகளே!!


இன்று இருப்பார்கள் மிக மகிழ்வுடன் உம்முடனே...

நித்தம் காண்பார்கள் உம் திருமுகத்தை நிறைவுடனே...

பூக்குமே பூக்களும் அங்கு, இறைவனின் இல்லத்திலே!

செபிப்போமே நாமும் அந்த சொர்க்க வாசிகளுடனே!!

**தொகுப்பு : மார்கரட் ஜயசீலி யோன்**






# சூழலை வெல்வோர் இளையோர்

**1. முன்னுரை**

பாய்ந்தோடும் வெள்ள ஓட்டத்தோடு விரைந்தோடிக் கொண்டிருப்பது மீனின் இயல்பல்ல. எத்துணை வேகமான நீரோட்டமாயினும் அதைப் பிளந்து-கொண்டு முனைந்து முன்னேறி இலக்கை அடைவது மீன். அதுபோல போகாமல் முன் வைத்த காலைப் பின் வையேன். எடுத்த கருமந்தனை முடிக்கு மட்டும் ஓயேன் என அடுக்கடுக்காக இடர் வரினும் தடுக்கி விழாது முன்னேறி தேர்ந்த இலக்கை அடைபவர் இளையோர். எனவே, எவ்வாறு இளையோர் புதிய பாதை படைத்து தம் இலட்சியத்தை அடையவேண்டும் என்பதனை ஊதாரி மைந்தன் உவமை வழி கற்றுக்கொள்வோம்.

**2. வெற்றியின் சின்னம்**

ஊதாரி மகனை நாம் தோல்வியின் சின்னமாய் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிறோம். தோல்வி உவமையின் உள்ளார்ந்த உண்மையல்ல. இளையவன் தோல்வியில் துவண்டு அமுந்தி அழிந்தவனல்ல. மாறாக, இவ்வையகம் உற்று நோக்கும் உயர்ந்த சிகரத்தில் ஏறி வெற்றிக் கொடி நாட்டி வியப்பின் குறியீடாக விளங்கியவன்! எழுந்து என் தந்தையிடம் செல்வேன் என்ற விருதை உச்சரித்து வீறுடன் எழுந்து வீர நடைபோட்டு வெற்றியின் இலக்கை அடைந்தவன். தலைமகன் இதற்கு முற்றிலும் மாறானவன்.

**3. தோல்வியின் சின்னம்**

நற்செய்தி முதல் மகனை தோல்வியின் அடையாளமென வடிவமைக்கிறது. இவன் நன்மை செய்யும் தந்தையின் மீது சினங்கொள்கிறான். இதுவரை உம்முடைய கட்டளையை ஒருபோதும் மீறியதே இல்லை (லூக் 15:29) எனப் பகர்ந்த பரிசேயரோடு தன்னை இணைத்துக்கொள்கிறான். பாவம் பெருகிய இடத்தில் பரனருள் பெருக்கெடுத்து ஓடுவதைப் (உரோ 5:20) பார்க்கத் தவறிவிட்டான். வானகத்திற்கு இறந்தவன் இப்பொழுது உயிர்த்துவிட்டான் என்ற உயரிய உண்மையை உணர முடியாத பாவியானான். குடும்பமே வெற்றிக் களிப்பில் திழைத்திருக்கும் போது இவன் மட்டும் தோல்வியின் பக்கம் சாய்ந்துவிட்டான்.

**4. சாய்ந்துகொண்டான்**

மூத்தவன் கூட்டுப் புழுபோல குடும்ப வட்டத்-திற்கு உள்ளேயே முடங்கி ஆசைகளை அடக்கி அடக்கி ஒடுங்கிப் போனான். குடும்ப எல்லைக் கோட்டைத் தாண்டினால் வரும் விளைவுகளைச் சந்திக்க அஞ்சி நடுங்கி அடிமையானவன். பாரும் இத்தனை ஆண்டுகளாக நான் அடிமை போன்று உமக்கு வேலை செய்து வருகிறேன் (லூக் 15:29. நல்லவன் எனக் கருதப்படுபவன் அயலார் குறை கூறும் நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

**5. தாறுமாறான வாழ்வு**

ஆனால் ஊதாரி மகன் சாதனை புரிந்து சரித்திரம் படைக்க, சுதந்திரக் காற்றை சுவாசிக்க குண்டு துளையாக் குடும்ப வளையத்தை விட்டு வெளியே-றுகிறான். எனினும் கூண்டுக் கிளியாய் இளையோர் கூட்டமைப்பு வடிவமைத்த சிலந்திக் கூட்டுக்குள் சிறை வைக்கப்படுகிறான். குழு கலாச்சாரமான சிகரெட், மது, மாது, போதை, ராகிங், கொலை முதலியவற்றை இயல்பாகப் பின்பற்றும் கட்டாயத்துக்கு உள்ளாகி குழுவினரின் கைப்பாவையாக அழிவின் விளிம்பிற்குத் தள்ளிக் கொள்கிறான். இதையே தாறுமாறான வாழ்வு (லூக் 15:13) என்றது நற்செய்தி.

**6. தனக்குக் கேடு**

இவற்றைத் தவறு என இளையவன் தெரிந்தி-ருந்தும் தவிர்க்க முடியாமல் பின்பற்றுகிறான். வீட்டுக்குள்ளேயிருக்கும் விளக்கொளியை அடைய வீட்டுச் சன்னல் கண்ணாடியை வெளியேயிருந்து மோதும் விட்டில் பூச்சிபோல குழுவோடு உரசிக் கொண்டிருக்கின்றான். தப்புவதற்குத் தேவையான திறந்த வெளியிருந்தும் அதைத் தெரிவு செய்யாது விட்டில் போல இளையோர் சிக்கித் தவிக்கின்றனர். தங்கள் வாழ்வைச் சீரழிக்கின்றனர்.

**7. சமுதாயத்திற்குக் கேடு**

தங்களுக்கு மட்டுமல்ல சமுதாயத்திற்கும் பேரிழப்பை விளைவிக்கின்றனர். கூட்டத்தோடு உணர்-ச்சி வசப்பட்டு, பேருந்துகள், இரயில்களுக்குத் தீ வைக்கின்றனர். இரயில் விமான நிலையங்களுக்குக் குண்டு வைக்கின்றனர். கூட்ட உணர்வைப் பின்பற்றிய பிறகு தூக்குத் தண்டனையை எதிர்கொள்ளும் போது தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

**8. தன்னுணர்வு**

அப்பொழுது சிந்திக்கின்றனர். நான் என் தந்தையின் இல்லத்தில் எப்படி வாழ்ந்தேன், காலுக்கு மிதியடி அணிவிக்க ஆட்கள், ஆடை அணிய வேலையாள், மோதிரம் போட பணியாள், உணவு பரிமாற ஊழியர், விரலசைத்தால் வேகமாக வரும் அடிமைகள். ஆனால் இப்பொழுது எப்படி இருக்கிறேன். பன்றி மேய்க்கிறேன். பன்றி உண்ணும் உணவை உண்ணுகிறேன். அந்தக் கழிவுகளைக் கூட எனக்குக் கொடுப்பாரில்லை. இங்கு பட்டினியால் நான் சாகிறேன் (லூக் 15:17) எனப் புலம்பி அழுகிறான். அழுகிறவர் ஆறுதலடைவர். இங்கு இளையவனுக்கு ஆறுதல் பிறக்கிறது.

**9. எழுச்சி**

நான் எழுந்து என் தந்தையிடம் புறப்பட்டுப் போவேன் (லூக் 15:18) என்றான். இந்த எழுச்சி எத்தகையது? மலையில் ஏறும் பல் சக்கரம் ஒன்றிலிருந்து விடுபட்டு மற்றதில் மாட்டிக் கொள்வது போன்றதல்ல. அல்லது குடிக்க மாட்டேன் எனத் தீர்மானிக்கும் குடி நோயாளி பாதியிலேயே பழைய நிலைக்குத் திரும்புவது போலல்ல. அல்லது இஸ்ரயேலை விடுவிக்கிறேன் என்று சொல்லிவிட்டு விடாது துரத்திய எகிப்தியர் போலுமல்ல, மரத்திற்கு மரம் தாண்டும் குரங்குபோல ஒரே பாய்ச்சலில் பாவத்திலிருந்து பரிசுத்தத்திற்குத் தாவிய இளைய மகன் இன்றைய இளையோருக்கு ஈட்டிய மாபெரும் வெற்றி.

**10. வெற்றி**

இவ்வுலகில் எவரும் அடைய முடியாத வெற்றி. எவரெஸ்ட் சிகரத்தை கிலாரி வெல்ல முடியும்! சந்திரனில் ஆம்ஸ்டிராங் கால் பதிக்க முடியும்! ஏன்? உலகையே அலெக்ஸாண்டர் வெல்ல முடியும்! ஆனால், எந்த மனிதனுக்கும் தன்னை வெல்லுவது மட்டும் மிகக் கடினம். ஊதாரி மகன் இதையே சாதித்துக் காட்டியுள்ளான். மரிய மதலேன், பவுலடியார், அகுஸ்தினார் யாவரும் இவ்வெற்றியை எழுச்சியுள்ள இளைய சமுகத்திற்கு விட்டுச் சென்றிருக்கின்றனர். இவர்களின் வெற்றி தீமைக்கு திரும்பாத வெற்றி.

**11. செபத்தின் வெற்றி**

தீமைக்குத் திரும்பா நிலைக்கு இளையவன் உயர்வதற்குத் துணை புரிந்தவர் பலர், தளரா மனதுடன் செபித்த தந்தை போன்றவர். இளையவன் பாவப் பழக்க வழக்கத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப, சமய, சமூக மக்களின் வேண்டுதல் அவனைத் தன்னுணர்வு பெறச் செய்தது. நான் பாவம் செய்தேன் (லூக் 15:!8) என ஏற்றுக்கொள்கிறான்.

**12. உயிர்ப்பு**

தன்னைத் தாழ்த்துகிறான். உம்முடைய கூலியாள்களுள் ஒருவராக என்னை வைத்துக்கொள்ளும் (15:19) என விண்ணப்பித்துவிட்டு இனிமேல் பாவம் செய்ய-மாட்டேன் (15:21) என உறுதி கூறுகிறான். இப்பொழுது வானகம் துணைக்கு வருகிறது. பாவம் பெருகிற இடத்தில் அருள் பொங்கி வழிந்தது (உரோ 5:20) பாவத்தை வென்றது. பாவத்தில் இறந்த இளையவனை மீண்டும் உயிர் பெறச் செய்தது. கிறிஸ்து உயிர்ப்பின் பங்காளியாக்கியது.

**13. வல்லமை**

உயிர்த்த இயேசு இவ்வுலகிலுள்ள எல்லா அமைப்புக்களையும் வென்றபின் நான் உலகை வென்றுவிட்டேன் (யோவா 16:33) என அறிவித்து அவ்வமைப்புக்களுக்குள் வெல்லும் சக்தியைப் புகுத்தியுள்ளார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# குருத்துவம் பற்றிய சொல் சித்திரங்கள்

குருக்கள் என்றென்றும் குருவே....

- ✱ இயேசுவை உடனிருக்கச் செய்யும் ஆற்றலுக்காகவே மக்களிடம் இருந்து தனித்து எடுக்கப்பட்டவர்கள்.
- ✱ இயேசுவின் இதயத்தில் விளங்கிய அன்பின் வெளிப்பாடே குருத்துவம்.
- ✱ குருக்கள் - கிறிஸ்துவின் நெருங்கிய நண்பர்கள்.
- ✱ குரு ஒரு நல்லாயன், இறைவனின் இதயத்திற்கு உகந்த மேய்ப்பர். ஒரு பங்குத் தளத்திற்கு ஆண்டவர் அருளக்கூடிய மிகப்பெரும் புதையல், இறை இரக்கத்தின் விலைமதிப்பற்ற கொடை.
- ✱ ஆன்மாவுக்கு உணவூட்டி, அதன் பயணத்திற்கான ஆற்றல் அருள்பவர்.
- ✱ மீட்புச் செயலின் தொடர் நிகழ்ச்சி குருவே.
- ✱ விண்ணகக் கருவூலத்தின் திறவுகோல் குருவிடமே உள்ளது.
- ✱ குருத்துவம் என்றும் குன்றாத தீபம்.
- ✱ கிறிஸ்துவின் ஆன்மீகமே குருக்களின் ஆன்மீகம்.
- ✱ இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் உயர்ந்தது குருத்துவம்.
- ✱ குருத்துவம் முடிவில்லா மதிப்பீடாகும்.
- ✱ குருவானவர் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இருக்கின்றார். கடவுள் நிலையில் சற்று குறைந்தவர். மனிதரைக் காட்டிலும் உயர்ந்தவர்.
- ✱ குரு இறைப்பண்புடைய மனிதர். குருத்துவம் இறை மாண்பு மிக்கது.
- ✱ குருவை மதிப்போர் இயேசுவை மதிக்கின்றனர். குருவை அவமதிப்போர் இயேசுவையே அவமதிக்கன்றனர்.

## குருக்களுக்கு உதவிடுவோருக்கு கடவுளின் கைம்மாறு



அயர்லாந்து நாட்டில் ஒரு நகரில் சிறு கடைக்குச் சொந்தக்காரரான ஒருவர் தனது மனைவி மற்றும் மகனுடன் வசித்து வந்தார். அவர்களுக்கு என்று பொருளோ செல்வமோ சேர்த்து வைத்ததில்லை. ஆனால் சிறந்த பக்திமான். ஒரு நாளும் திருப்பலியில் பங்குபெறாது இருந்ததில்லை. ஒரு இளம் குருவானவர் தனது உடல் நலமின்மையாலும் அதிக சிரமப்பட்டு படித்ததினாலும் அவருடைய மனநிலையில் மாற்றம் கொண்டு தனது குருத்துவ கடமைகளை சரிவர செய்திடாத நிலையில் இங்கும் அங்குமாக அலைந்து திரிந்து வந்தார். ஆனால் பழகுவதற்கு இனிமையாகவும் யாருக்கும் தொந்தரவு ஏற்படுத்தாமலும் இருந்து வந்தார்.

இதனிடையில் குருவினுடைய நிலையை உணர்ந்திட்ட அந்த கடைக்கு சொந்தக்காரர் தனது மனைவியுடன் கலந்து பேசி குருவை தனது வீட்டில் உள்ள ஒரு சிறிய அறையில் தங்கச் செய்து கவனித்து வந்தார். அக்குருவானவரும் அவர்களுடைய அழைப்பை ஏற்று அங்கேயே தங்கி தனது விருப்பம் போல் வெளியிடங்களுக்குச் சென்று வந்தார். தனது இறப்பிற்கு முன் தனது சுய நினைவை அடைந்திட்ட அக்குருவானவர் தனது மரணப்படுக்கையில் அமர்ந்து கொண்டு இறைவனை மன்றாடி தனக்கு உதவிட்ட நல் உள்ளம் படைத்த அக்குடும்பத்தினர்க்காய் மன்றாடி அவர்களுக்கு ஆயிரமடங்காய் ஆசீர்வாதங்களை பொழிந்திட மன்றாடி தனது ஆசீர் வழங்கி மரித்தார்.

வியத்தகு முறையில் அச்சிறு கடை வியாபாரி அதிக உடைமைகளுக்கு சொந்தக்காரராகி அவருடைய மகனும் ஒரு கோடீஸ்வரனாக மாறினான். அவனுடைய நான்கு சகோதரிகளும் அருட்சகோதரிகளாய் மாறினர். மேலும் அவனுடைய...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# கணவன் மனைவி இருவருக்கும் சில ஆலோசனைகள்



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு 168

### 1. குறை பிடிக்காதீர்கள்

உடனுக்குடன் குற்றங்கண்டு பிடித்து கண்டிக்க முற்படாதீர்கள். எது சரி எது பிழை என்பதை முழுமையாக அறிந்தவர் இறைவன் ஒருவரே.

### 2. மன்னியுங்கள்

ஒருவர் மற்றவரில் நம்பிக்கை வைக்க மறுப்பதும், விட்டுக்கொடுக்காமல் அடம்பிடிப்பதும், மன்னிக்காமல் வைராக்கியமாக இருப்பதும் குடும்ப அமைதியைக் கெடுத்துவிடும்.

### 3. சிறியவற்றைப் பெரிதுபடுத்தாதீர்கள்

காலையில் இட்லிக்குப் பதிலாக தோசையைச் செய்து வைக்கும் மனைவியை ஏசாதீர்கள். ஒருவரை விருந்துக்கு அழைத்துவிட்டு கணவன் மனைவியிடம் சொல்லாமல் விட்டுவிட்டார் என்றால் அதைவைத்து வீட்டை இரண்டாக்காதீர்கள். இருவரிடமும் குறைகள் இருக்கும். அன்பாக ஒருவர் மற்றவரைத் திருத்துங்கள்.

### 4. மூடி மறைக்காதீர்கள்

மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு செயற்படாது அதை வெளிப்படுத்திவிடுங்கள். நல்ல முறையில் பேசித்தீர்த்துக் கொள்ளுங்கள்.

### 5. நாவை அடக்குங்கள்

கோபத்தோடு எதையும் பேசாதீர்கள்.

### 6. எதற்கும் வாதாடாதீர்கள்

குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லும் போது சில வார்த்தைகளில் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். வளவள எனப் பேசிக்கொண்டே இருக்காதீர்கள். ஒரே நேரத்தில் ஒரு விடயத்தை மட்டும் பேசுங்கள். சந்து பொந்தெல்லாம் பாயும் எலியைப் போல் இல்லாமல்இ கிளைக்குக்கிளை தாவும் குரங்கைப்போல் இல்லாமல் ஒரே கிளையில் இருந்து உரையாடலை முடித்துக் கொள்ளுங்கள். உங்களிடம் குற்றம் இருந்தால் தாழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். திருந்துவதாக வாக்களியுங்கள்.

### 7. வீட்டுச்சண்டை வீதிக்கு ஏன்?

சிலர் அறைக்குள் சண்டை தொடங்கியவுடன், உடனே வீதிக்கு ஓடி வந்து எல்லோருக்கும் கேட்கும் விதத்தில் கத்துவர். இது பிழை, சண்டை என்றதும் மனைவிமார் உங்கள் அப்பா, அம்மா, மாமா? மாமி என்று மற்றவர்களை உடனே கூப்பிட வேண்டாம். உங்களில் இருக்கும் தவறைப் பற்றி உங்கள் கணவர் அன்பாகச் சொல்ல அதை நீங்கள் வெகுளித்தனமாக அப்பா அம்மாவிடம் சொல்லப்போனால், உங்கள் கணவர் உங்களிடம் தனது மனதைத் திறந்து கதைப்பார் என எதிர்பார்க்காதீர்கள்.

### 8. நேசியுங்கள்

ஒருவர் ஒருவரை உள்ளன்போடு நேசியுங்கள். அந்நேரத்தில் குடும்பப் பாரத்தை இருவரும் பகிர்ந்து கொள்ளுங்கள். ஒருமனப்பட்டு அதைச் சுமக்க முன்வாருங்கள். தொழிலை முன்கொண்டு நீண்டகாலம் ஒருவர் ஒருவரை விட்டுப் பிரிந்திருப்பதை இயன்றவரை தவிர்க்கப் பாருங்கள். பிரிவு காலத்தில் சோதனைகள் பல ஏற்படலாம்.

### 9. துரோகம் செய்யாதீர்கள்

ஒருவர் ஒருவருக்குத் துரோகம் செய்யாதீர்கள். பிரமாணிக்கமாயிருங்கள். பிரமாணிக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் சோதனைகளையும், சோதனைகளுக்கு இடந்தரும் சந்தர்ப்பங்களையும் விட்டு விலகுங்கள். தன் மனைவியைத் தவிர பிற பெண்களிடம் கூச்சம் இன்றிப் பேசிப் பழகுவதைக் கணவன் தவிர்க்க வேண்டும். பெண்ணுக்கு இயற்கையாகவே இருக்க வேண்டிய அச்சம், நாணம், அடக்கம், மரியாதை போன்ற குணங்களை மனைவி போற்ற வேண்டும்.

### 10. சண்டை ஏற்படல்

இருவருக்குமிடையில் சண்டையேற்படும் போது ஒரு தலைப்பில் மட்டும் சண்டை பிடிப்பது நன்று. அதே போன்று பழைய கதைகளைக் கிண்டிக் கிளறாது இருப்பது நன்று. பெற்றோர், மாமா, மாமியை இழுத்துப் பேசுவதை (ஏசுவதை)த் தவிர்த்துக் கொள்ளுங்கள். சண்டையை அன்றோடு முடித்து விடுவது நன்று. ஒருவர் மற்றவரை அவமானப்படுத்தும் விதத்தில் சண்டை பிடிப்பது தவறு. ஒருவர் மற்றவரில் கண்ட குறைபாட்டைச் சண்டை நேரத்தில் இழுத்துப் பேசுவது தவறு. தமது பிரச்சினைகளைச் சரியான பயிற்சி பெறாதவர்களிடம் சொல்வது தவறு. அது வேறு விளைவுகளை ஏற்படுத்தி விடும். மாதவிடாய் நின்றதும் அல்லது கற்பப்பையைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றியதும் பெண்ணுக்குப் பாதுகாப்புணர்வு குறையலாம். நான் இனிமேல் பிரயோசனம் இல்லாத ஒருவர் என்ற நிலை ஏற்படலாம். நான் முன்பு போல் சரீரத்தில் கவர்ச்சியான ஒருத்தியல்ல. உடலுறவிலும் முன்பு போல் கவர்ச்சியில்லை என்ற எண்ணம் எழுவதால் கணவன் முன்பு போல் என் மீது அன்பில்லை என்ற சந்தேகம் எழலாம். இளம் குடும்பங்களிலும், வயதுவந்த குடும்பங்களிலும் பொறாமையும், சந்தேகமும், விசுவாசக்குறைவும் ஏற்படலாம். தான் அன்பு செய்பவரைத் தனக்குள் மட்டும் கட்டுப்படுத்திவைக்கப்பார்ப்பர். இது இளங்குடும்பப் பெண்களில் அதிகம் ஏற்படலாம். ஆகவே ஒருவர் மற்றவருக்குச் சந்தேக உணர்வு ஏற்படும் விதத்தில் நடமாடாமல், பாதுகாப்புணர்வு ஏற்படும் விதத்தில் செயற்படுவது நன்று.

### 11. குடும்ப ஆன்மீகம்

குடும்ப ஆன்மீகத்தைக் கட்டியெழுப்ப முயல வேண்டும். கிறிஸ்துவை குடும்பத்தின் தலைவராகவும், பாதுகாவலராகவும் ஏற்றுக்கொண்டு வாழ்வது நலம்.


.................................................................

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

**கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதாவது, அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார்” (உரோ 8:28)**

# எல்லாம் நமக்கு ஏதுவாகவே நடக்கிறது



உங்களுக்கு ஒரு கதை சொல்ல விரும்புகின்றேன்... ஒரு நிலக்கரி சுரங்கத்தில் ஓர் ஏழைத் தொழிலாளி வேலை செய்து கொண்டிருந்தார். அவர் அடிக்கடி தன்கூட வேலை செய்து கொண்டிருந்த எல்லாரிடமும் ஆண்டவர் தனக்கும், தன் குடும்பத்திற்கும் செய்த எல்லா நன்மைகளையும் கூறுவார். ஆனால் சக தொழிலாளர்கள் “நீ எப்பொழுதும் ஆண்டவரைப் பற்றியே பேசுகிறாயே?”என்று பரிகாசம் செய்தார்கள். அது அந்தத் தொழிலாளியை மிகவும் கஷ்டப்படுத்தியது.

ஒரு நாள் உச்சி வேளையில் எல்லாரும் உணவு சாப்பிட கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று ஒரு நாய் அந்த அன்பரின் உணவுப் பொட்டலத்தை எடுத்துக்கொண்டு ஓடியது. உடனே சக தொழிலாளர்கள் அவரிடம் “உன் ஆண்டவரால் உன் சாப்பாட்டைக் கூட காப்பாற்ற முடியவில்லையே?” என்று கேலி செய்தார்கள்.

இந்தத் தொழிலாளியும் நாயின் பின்னால் சாப்பாட்டை எடுக்க ஓடினார். திடீரென்று ஒரு பயங்கரமான சத்தம் கேட்டது. அவர் திரும்பிப் பார்த்தபோது சுரங்கம் இடிந்து விழுந்திருந்தது. அதில் வேலை பார்த்த சக தொழிலாளர்கள் அனைவரும் மண்ணுக்குள் புதைந்து விட்டார்கள். அவர் அங்கு இருந்திருந்தால் அவரும் இறந்திருப்பார். அவர்கள் கேலி செய்தபோது கவலையாக இருந்தாலும் ஆண்டவர் செய்த அதிசயத்திற்காக அவர் நன்றி செலுத்தினார்.

பழைய ஏற்பாட்டில் யோசேப்பின் வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது அவருடைய சகோதரர்கள் பாழும் கிணற்றில் அவரைத் தள்ளிவிட்டுச் சென்றார்கள். வியாபாரிகளால் காப்பாற்றப்பட்டு அவர் எல்லா வேதனைகளையும் ஆண்டவருக்காக பொறுமையோடு ஏற்றுக்கொண்டார். ஆண்டவர் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். யோசேப்பு தன் சகோதரர்களிடம் “நீங்கள் எனக்கு தீமை செய்தீர்கள். ஆண்டவரோ இன்று நடப்பதுபோல் திரளான மக்களை உயிரோக் காக்கும் பொருட்டு நன்மையாக மாற்றிவிட்டார்” (தொ.நூ 50:20) என்றார்.

அன்பானவர்களே, உலக வாழ்க்கையிலும் கூட சில செயல்கள் “ஏன் இது இப்படி நடந்தால் நன்மையாக இருக்குமே?” என்று நாம் நினைக்கலாம். ஆனால் கடவுள் எல்லா நற்செயல்களையும் நம் நன்மைக்காகத்தான் செய்கிறார். கடவுள் தீமையை நன்மையாக மாற்றுவார்.

யோசேப்பின் வாழ்க்கையில் நடந்த துயரங்கள் நம் வாழ்க்கையிலும் நடக்கும் என்று நினைத்து கவலைப்படவேண்டாம். யோசேப்பை மட்டும் ஆண்டவர் ஆசீர்வதிக்கவில்லை. மாறாக அந்தத் தேசத்திற்கும், அவர் குடும்பத்திற்கும் நிறைய ஆசீர் வழங்கினார்.

“கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்” என்றுரைத்த ஆண்டவரிடம் நம் அனைத்துத் தேவைகளுக்காகவும் நம்பிக்கையோடு வேண்டுவோம்.



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 16வது ஞாயிறு (21.07.2019)

▶▶ பேதுரு ◀◀

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 16வது வாரத்தில் கால்பதிக்கும் நமக்கு இன்றைய நாளுக்கான மூன்று வாசகங்களும் ஒரே ஒரு கருத்தைத்தான் வெளிப்படுத்துகின்றன. அதாவது கடவுளை நாம் விரும்பிச் சென்று வரவேற்க வேண்டும் என்பதுதான். மார்த்தா தான் விரும்பிச் சென்று இயேசுவை தனது வீட்டிற்கு அழைத்தார். முதல் வாசகத்தில் வழித்தோன்றலைப் பரிசாக அளித்த இறைவன் நற்செய்தியில் மார்த்தாவிற்கு இறைவார்த்தையைப் பரிசாக அளித்தார். அதுவே விண்ணரசிற்கு வழி என்றும் நாம் செய்யும் எத்தகைய செயலும் இறைவார்த்தையை விட்டு நம்மை விலகிச் செல்லக்கூடாதென்றும், விண்ணரசின் வழியை - தன்னை அடையும் வழியை ஒப்புயர்வற்ற பரிசாக மார்த்தாவின் விருந்தோம்பலுக்கு அளிக்கின்றார். இக்கட்டான காலகட்டத்தில் பரபரப்பான சூழ்நிலையில் வாழும் நாமும் இறைவனை நாட இறைவார்த்தையை தேடும் மக்களாக வாழ இறையருளை வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 18:1-10**
என் தலைவரே நீர் உம் அடியானை விட்டுக் கடந்து போகாதிருப்பீராக.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 1:24-28**
மறைந்திருந்த இறைத்திட்டம் இறை மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா சீரிய நல் உள்ளத்தோடு வார்த்தையைக் கேட்டு அதைக் காத்து மன-உறுதியுடன் பலன் தருபவர்கள் பேறுபெற்றோர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 10:38-42**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

செப வாழ்வையும் பணிவாழ்வையும் தம் இரு கண்கள் எனக் கொண்டு பணியாற்றும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள், இறைமக்கள் ஆகிய அனைவரும் உலகை உய்விக்கும் தமது அர்ப்பண வாழ்வில் என்றும் நிலைத்து வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

இன மத மொழி பேதங்களால் அல்லலுறும் எமது நாட்டை நேசிக்கும் அனைவரும் எல்லா மதங்களும் ஒருமித்து கூறும் மதிப்பீடுகளை கைக்கொண்டு, மனித மாண்பிற்கு விரோதமான செயல்பாடுகளில் இருந்து விடுபட்டு, எல்லோரும் விரும்புகின்ற பொதுவேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்த மரியாவைப் போன்று, நாமும் இறைவார்த்தையை ஏற்று அதன் படி வாழவும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக எமது பணிவாழ்வைத் தொடரவும், எமது வாழ்வு ஏனையோர்க்கு வாழ்வாய் அமையவும், இறைவனின் பணியாளர்களை இன்முகத்தோடு தேடிச் சென்று வரவேற்கவும் வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 17வது ஞாயிறு (28.07.2019)

**வாசக விளக்கம்:** ஆண்டின் பொதுக்காலத்தின் 15வது ஞாயிறு தினத்தில் திருப்பலி நிறைவேற்ற ஒன்றுகூடி வந்திருக்கும் இறைநெஞ்சங்களே! ஆண்டவரே எமக்கு செபிக்க கற்றுத்தாரும் எனக்கேட்ட திருத்தூதர்களுக்கு இயேசு கற்பித்து கொடுத்த செபம் எமது சிந்தனைக்காகத் தரப்பட்டுள்ளது. இயேசு கற்றுக்கொடுத்த செபமானது வார்த்தைகளை அடுக்கிக் கொண்டுபோகும் வார்த்தை விளையாட்டு அல்ல, மாறாக இது இருநோக்கு உறவுகளைக் கொண்ட ஒரு பெட்டகம் ஆகும். முதலாவது நாம் கடவுளோடு கொள்ள வேண்டிய மேல்நோக்கு உறவு, இரண்டாவது நாம் பிற மனிதர்களிடம் கொள்ள வேண்டிய சம நோக்கு உறவு. இன்றைய சூழலில் எமது செபங்கள் உலகத் தேவைகளை உள்ளடக்கியதாக இருப்பதில் நாம் கேட்பது கிடைப்பதில்லை. எனவே தூய ஆவியின் துணையோடு இறைச் சித்தத்தை நோக்கியதாக எமது செபங்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் தட்டிக் கேட்பதும், தேடுவதும் நம்மை வந்தடையும். சிந்தித்துச் செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தொ.நூ 18:20-32**
என் தலைவரே, நான் இன்னும் பேச வேண்டும். சினமடைய வேண்டாம்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 2:12-14**
கடவுள் உங்களை அவரோடு உயிர்பெறச் செய்தார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா பிள்ளைக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டவர்கள் அதனால் நாம் அப்பா தந்தையே என அழைக்கின்றோம். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 11:1-13**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

செபவாழ்வில் அன்புச் செயல்களிலும் தன் மக்களை வழிநடத்தும் திருஅவையானது தனது திருவழிபாடுகளையும் செபங்களையும் இயேசு கற்பித்த செபத்தின் அடிப்படையிலேயே அமைத்து எமக்கு வழிகாட்டுகின்றது என்பதை உணர்ந்தவர்களாக திருத்தந்தை திருப்பணியாளர் அனைவருக்காகவும் அவர்களது பணிவாழ்விற்காகவும் செபித்து வாழ வரமருள வேண்டுமென்று...

ஆயிரம் செபங்களைவிட ஒரு அன்புச் செயல் உயர்வானது இதை உணர்ந்தவர்களாக நாட்டின் தலைவர்களும் பொறுப்பதிகாரிகளும் மக்களுக்காக அன்புச் செயல்புரியவும் மனிதத்தை மதித்து பேதங்கள் அற்றச் சமூகத்தை உருவாக்கும் பணியில் முழுமனதுடன் செயல்பட வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

செபத்தின் வல்லமையையும் மேன்மையையும் உணர்ந்தவர்களாக செபமும் செயலும் இணைந்த வாழ்வை நாம் வாழவும் எம் மத்தியில் வாழும் ஏழை எளியவரின் வாழ்விற்காக நாம் உழைக்கவும் தூய அன்னை தெரேசாவைப் போன்று செபமும் இணைந்த வாழ்வை நாம் வாழவும் வரமருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 08

## சோதனைகளை எதிர்த்தல்

- நாம் உலகில் வாழ்வதுவரை சோதனையும் வேதனையும் இருக்கத்தான் செய்யும்.
- இதனால்தான் "மனிதனின் வாழ்நாள் உலகில் போர்ச்சேவை நாளன்றோ?" (யோபு 7:1) என்று யோபு ஏட்டில் வரையப்பட்டிருக்கிறது.
- ஆதலால், கண்ணுறக்கமின்றி, "யாரை விழுங்கலாமெனத் தேடித் திரிகிற (1அர 5:8) பசாசு நம்மை ஏய்க்க வழி காணாவகையில் நாம் ஒவ்வொருவரும் நம் சோதனையின்போது மிகக் கவனமாய் இருக்கவேண்டும்.
- ஒருபோதும் சோதனைகள் தோன்றாவகையில் நிறைபண்பாளர்களும் புனிதர்களும் எவருமே இல்லை. எனவே, சோதனை ஒன்றும் வராமல் நம்மைக் காத்தல் இயலாது.
- சோதனைகள் தொல்லை தருபவையாயும் கடினமானவையாயும் இருந்தபோதிலும் பலவேளை அவை மிக்க பயன்தருபவையாகவும் விளங்குகின்றன. ஏனென்றால், அவற்றால் மனிதன் தாழ்ச்சியுறுகிறான். தூய்மை பெறுகின்றான், அறிவுறுத்தப்படுகின்றான்.
- புனிதர்கள் அனைவரும் பல துன்ப சோதனைகளைக் கடந்துசென்றார்கள், முன்னேற்றம் அடைந்தார்கள்.
- சோதனைகளைத் தாங்க விரும்பாதவர்கள் சபிக்கப்பட்டுத் தவறிப்போனார்கள்.
- சோதனைகளும் எதிர்ப்புக்களும் இல்லாத புனிதமான சபையோ மறைவான ஓர் இடமோ இல்லை.
- மனிதன் வாழும்வரை சோதனைகளிலிருந்து முற்றும் விலகியிருக்க முடியாது. ஏனென்றால், சோதனைகளின் இருப்பிடம் நம்மில் இருக்கிறது. அதனால்தான், உடலுணர்ச்சிகளுடன் நாம் பிறந்திருக்கின்றோம்.
- சோதனை அல்லது துன்பம் ஒன்று மறைய மற்றொன்று நம்மைத் தொடர்கின்றது. ஏதாவது ஒன்றை ஓயாமல் நாம் சகித்துத்தான் ஆக வேண்டும். நாம் இன்ப நிலையின் பலனை இழந்துவிட்டதுதான் இதற்குக் காரணம்.
- பலர் சோதனையிலிருந்து தப்பி ஓட விழைகின்றனர். அத்தகையவர்களே பெரும்பாலும் மிக வருந்தத்தக்க நிலையில் அவற்றில் விழுகின்றனர்.
- ஓட்டத்தால் மட்டும் நாம் வெற்றி கொள்ள முடிவதில்லை. ஆனால், பொறுமை, உண்மையான தாழ்ச்சி இவற்றால் தாம் மாற்றோர் அனைவரையும் விட நாம் ஆற்றல் பெறமுடிகிறது.
- புறத்தளவில் மட்டும் சோதனையை அகற்றிவிட்டு, அதன் வேரைப் பிடுங்கி எறியாதவன் முன்னேற்றம் அடைவதில்லை. ஏனெனில், விரைவில் சோதனைகள் அவனை மீண்டும் பற்றி, முன்னிலும் இழிவான நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.
- கொடுமையாலும், விடாப்பிடியாலும் அவற்றை மேற்கொள்வது அரிது, இறைவனின் துணையால் பொறுமையோடும், பெருந்தன்மையோடும் சிறிது சிறிதாக மேற்கொள்வது எளிது.
- சோதனையின்போது அடிக்கடி அறிவுரை பெற்றுக்கொள். சோதனையுற்றவரைக் கடிந்துகொள்ளாதே. ஆனால், நீ ஆறுதல் பெற விரும்புவதுபோல் பிறருக்கு ஆறுதல் வழங்கு.
- எல்லாத் தீய சோதனைகளுக்கும் தொடக்கம் மனத்தின் நிலையாமையும் இறைவனில் நம்பிக்கைக் குறைவும் ஆகும்.
- சுக்கானை இழந்த மரக்கலம் அலைகளால் அங்கும் இங்கும் அலைக்கப்படுவதுபோல், கவனமற்ற மனிதனும் தனது நல்லுறுதியைக் கைவிடுவதால் பலவிதமாகச் சோதிக்கப்படுகிறான்.
- தீ இரும்பையும், சோதனை நல்ல மனிதனையும் சோதித்துப் பார்க்கின்றன.
- நமது ஆற்றலைப் பன்முறை நாமே அறிவதில்லை. ஆனால், நாம் எத்தன்மையர் என்பதைச் சோதனை வெளிப்படுத்தி விடுகிறது.
- எனினும், குறிப்பாகச் சோதனையின் தொடக்கத்தில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அலகை நம்மைத் தட்டிய உடனே, அதை நடைக்கு வெளியே தடுத்து நிறுத்தி, நம் உள்ளக் கதவு வழியாக நுழையவிடாதிருந்தால். எளிதில் அவனை வென்றுவிடலாம்.
- எனவேதான், தொடக்கத்தில் தடைசெய், நீண்ட நேரத்திற்குப்பின் நோய் முற்றிய பின்னர் மருந்து கொடுப்பது பயனற்றதாகும். என்றொருவர் மொழிந்தார். (ஓவிட்)
- ஏனெனில், முதலில் வெறும் சிந்தனையும், பின் உறுதியான உருத்தோற்றமும், பின் இன்பம், தீய அசைவும், முடிவில் இசைவும் மனதில் ஒன்றன்பின் ஒன்றாக எழுகின்றன.
- நாம் அவற்றை முதலில் எதிர்க்கவில்லையென்றால், வஞ்சகப் பேய் இவ்விதம் சிறிதுசிறிதாக முற்றும் நம்மில் புகுந்துவிடும்.
- ஒருவன் போராடாமல் சோம்பி இருக்கும் ஒவ்வொரு நாளும் வலிமை குன்றிக்கொண்டே போகிறான். அலகை அவனுக்கு எதிராய் வன்மை பெற்று வருகிறது.

தொடரும்

# ‘நீங்கள், நீங்களல்ல கிறிஸ்துவே’

## – சுதேசகுருக்கள் துறவியர் தினம் –

சுதே
குருக்க
துறவி
தின
28.07.2

## ‘நீங்கள், நீங்களல்ல கிறிஸ்துவே’



### பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனரின் செய்தி

எங்களுடைய ஒரே வாழ்வாக திகழ்பவர் இயேசுகிறிஸ்து ஒருவரே. அவரே எமது அரனும் கோட்டையுமாவார். தொடர்ச்சியாக நான் உங்களுக்கு சொல்லுகிறேன். குருக்கள் துறவியர் அனைவரினதும் ஒரே நோக்கம் கிறிஸ்து ஒருவரே. அவரே எம்மோடு இருப்பவரும் எமது வாழ்வுமானவர். உயிர்ப்பின் மூலம் வாழ்வை தந்து உயிரூட்டியவரும் அவரே. எப்போதும் நாம் எங்களுடைய வாழ்வை ஒளியின் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் நாம் ஒவ்வொருவர் மூலமும் பார்க்க கூடிய ஒன்று, வாழ்வாகிய இயேசு கிறிஸ்துவையே. எங்கள் வாழ்வில் தொடக்கமும் முடிவும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே. கிறிஸ்துவிற்குள் மக்களை கொண்டு செல்லும் வல்லமை குருத்துவம் எனும் அருள் அருளடையாளத்திற்கு மட்டுமே உள்ளது. இயேசுவின் மூலம் தான் எமது பாவங்களில் இருந்து நாம் விடுபட்டு, பரலோகத்திற்குள் நுழைய கதவு திறக்கப்படுகின்றது.

“நீங்கள் எப்பொழுதும் இறைவனின் தூதர் என்பதை வெளிகாட்ட மறக்காதீர்கள்”. நாங்கள் இவ்வுலகத்தில் வாழும் புனிதர்களாக மாற வேண்டும். நவீன கண்டுபிடிப்புக்களுடன் போராடுவது மட்டுமன்றி, தற்பொழுது நம் நாட்டில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின் ஊடாக நாங்கள் தளராமல் ஒரே விசுவாச ஒளியின் விளக்காக செயற்பட வேண்டும். அத்தோடு, இறைவார்த்தையே எங்கள் வாழ்வாகவும் இருக்க வேண்டும் என்பதை (எவ்அங்கேலியோன்) எனும் எபிரேய மொழி எடுத்துக்கூறுகின்றது. எங்களை உண்மையாகவே வாழவைப்பது இயேசு கிறிஸ்து என்பதோடு, எங்கள் அனைவரையும் பாவ சூழ்ச்சியில் இருந்து விடுவித்து, ஒப்புரவின் மூலம் இறைவனின் செய்தியை நான்கு திசையிலும் பரப்புவதற்கும், மறையை பகிர்ந்து கொடுக்கும் சாட்சியாளர்களாக திகழவும் அழைப்பு விடுக்கப்படுகிறது. இக் காரணங்களினால் இயேசுவின் இவ்வுலக மறைபரப்பு சேவை பூரணமாக சிலுவை மரணத்தில் நிறைவுற்றது. இவற்றிற்கிணங்க, தற்போது எம் தேசத்தில் நிலவியுள்ள அபாய நிலையில் உண்மைக்கு சான்று பகரும் நிரந்தர மறைபரப்பாலராக திகழ எம்மை இன்று அழைக்கின்றனர். “அரச, குருத்துவ, ஆயத்துவ பணி ஆகிய மூன்றிலும் பொதுமக்களுக்கும் பங்கு உள்ளது” என்பதை 2ம் வத்திக்கான் சங்கம் ஞாபகமூட்டி அதை பின்தொடர வழிகாட்டுகின்றது.

அவ்வாறே, LUMEN GENTIUM 14-16 கத்தோலிக்கம் மற்றும் உலக சமன்பாட்டை வெளிப்படுத்துகிறது. மக்கள் அனைவருக்கும் சமமாக செயற்படுத்தும் விதத்தை காட்டுகின்றது. அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு அழைப்பு விடுக்கின்றது. ஒவ்வொருவரினதும் அழைப்பை செயற்படுத்தும் வழிமுறையும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. முழு உலகிற்கும் மறை பரப்பு சேவையை விரிவுபடுத்தும் முறை இச் சபையினால் காட்டப்பட்டுள்ளது. “ஆண்டவர் கொல்கிறார்” உயிருடன் தருகின்றார்.. (1சாமுவேல் 2:6)

அவ்வாறே, கிறிஸ்து ஆண்டவர் தனது அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த செயற்பாடுகளை தற்போது உள்ள குருக்கள் துறவியர் மேற்கொள்கின்றனர். இறை விருப்பத்தின் மூலம் கிடைத்துள்ள அழைத்தலை இவர்கள் செயற்படுத்த இறைவன் வழிகாட்டுகிறார். இயேசுவை வாழ்வாக்கிக்கொள்ள மெய்யாகவே முழுமனதுடன் செபம் செய்தல், விசுவாசத்தில் பயிற்றுவித்து, செபம் செய்யும் விதத்தை அவர்களுக்கு பயிற்றுவிப்பதுடன், இறைவார்த்தையை அவர்கள் பின்பற்ற வேண்டிய ஆலோசனைகளையும் கூற வேண்டும்.

“நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல், அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல”. (யோவான் 17:14) எனும் இறைவார்த்தையானது, நாம் இறை அழைத்தலுக்கு சொந்தமானவர்கள், இயேசுவின் குரலுக்கு செவிசாய்த்து அதை பின்பற்ற வேண்டும் என்பதை கூறுகின்றது. இளமை காலமே இறை சேவைக்குள் இணைய சிறந்த காலம். இறைவனுக்கு ஏற்ற வாழ்வை வாழ்ந்து அவரை மகிமைபடுத்தல் வேண்டும். திருத்தந்தை 12ம் பயஸ் அவர்கள் (Mystici Corporis - 1943) எனும் சுற்றுமடலில் திருச்சபையானது கறிஸ்துவின் உடல் என்பதை பிரதிநிதித்துவப்படுத்தி மறைபரப்பு சேவையில் ஒன்றிணைய செயற்படுகின்றது.

தனது கைகளில் எங்களை பாதுகாத்து பராமரிப்பது இயேசு கிறிஸ்துவே. அவ்வாறே, எங்கள் முழு வாழ்வையுமே இறைவனின் முன்னிலையில் அர்ப்பணித்து, இயேசுவின் அன்பை நமது வாழ்வாக்குவது எங்கள் கடமையே. “திருவழிபாடு திருச்சபையின் செயல் முழுவதுமே நாடி நிற்கும் சிகரமாக அமைந்துள்ளது. அத்துடன் திருச்சபையின் ஆற்றல் அனைத்திற்கும் அது ஓர் ஊற்றாகவும் உள்ளது.” (இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருவழிபாடு 10)

இதனால் அனைத்து விசுவாசிகளும் ஆழமான பக்தியுடன் சமூகமளிக்க வேண்டும். உண்மையான விசுவாசத்தில் நாங்கள் கிறிஸ்துவின் பக்தியாளர்களாக “நீங்கள் நீங்களல்ல கிறிஸ்துவே” எனும் வார்த்தைக்கிணங்க நிரந்தரமான இறை அழைப்பிற்கு ஏற்ப சிறந்த விதத்தில் செயற்பட வேண்டும். விசுவாசத்தை பலம் மிக்க வாழ்வாக்கும் ஆயுதம் செபம் ஒன்றே ஆகும், அதை ஞாபகமூட்டி எமது தேசத்தை சமாதானம் மிக்கதாகவும், ஒற்றுமை மிக்கதாகவும் மாற்றிட இறைவனிடம் மன்றாடுவோம். அனுதினமும் இறை சேவைக்கு தனது முழு வாழ்வையுமே அர்ப்பணித்துள்ள குருக்கள், துறவியர் அனைவரும் இறை அன்பில் பூரணமாகி, இறைவனின் கைகளில் பாதுகாக்கப்பட்டு, அவரில் சரியாக செயற்பட தேவையான வரங்களை வேண்டி இறைவனிடம் மன்றாடுவதோடு, இலங்கை வாழ் மக்கள் அனைவரும் இறை ஒளியில் பூரணமாகி, இறைபணிக்கு இளைஞர்கள் தங்கள் மனதை திறந்து செயற்படவும் இறைவனிடம் மன்றாடுவோம்.

**பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர்**
**அருட்பணி பசில் ரொஹான்**

## புனித பேதுருவின் குரு மாணவர்களுக்கான தேசிய பொக்கிஷ நிதி

கீழே கையொப்பமிட்டுள்ள நான், பாப்பிறையின் அப்போஸ்தலரான புனித. பேதுரு சபையில் வருடாந்த / சதாகால அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னும் இறையழைத்தல்கள் வேண்டி மன்றாடவும், என்னால் முடிந்தவகையில் சமுதாய-த்திற்கு உதவி செய்வதற்கு ஒத்துழைப்பேன். இறையரசின் மறைதூதர்களாவதற்கு அருள் வேண்டுவோம். நீங்கள் எவ்வகையில் பண உதவி செய்ய விரும்புகின்றீர்? காசோலை, காசுக்கட்டளை, பணம், சொத்துக்கள் வழியாய் காசோலையாய் இருப்பின் Pontifical Mission Societies என்னும் பெயருக்கும், காசுக்கட்டளையாயின் பொரல்லை தபால் நிலையத்திற்கும் அனுப்புங்கள். சொத்துக்கள் மூலமாக செலுத்துவதாயின் நாம் உங்களை அதற்காக சந்திக்க வேண்டியிருப்பதால் இது பற்றிய மேலதிக தகவல்களை கடிதத்தின் வழியாய் அறியத்தருவோம். இந்நிதிக்காக என்னுடைய உதவி தொகை ரூபா ...... இச்சங்கத்தினால் அச்சிடப்படும் சஞ்சிகையை பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?

பெயர்: ......................................

முகவரி: ....................................

தொலைபேசி / தொலைநகல் / மின்னஞ்சல்:

.....................................................................

கையொப்பம்: .................. திகதி: ..................

**அருட்பணி**
**தேசிய இயக்குனர்,**
**பாப்பிறை மறைபரப்பு சபைகள்,**
**இல 19, பல்கம் இடம், கொழும்பு – 08.**
**தொலைபேசி: 011-2685673**

## 2018 ஆம் ஆண்டுக்கான ச

## தின நிதிச்

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 103,600.00 |
| பதுளை | 119,664.00 |
| சிலாபம் | 914,010.00 |
| கொழும்பு | 3,607,381.00 |
| காலி | 140,000.00 |
| யாழ்ப்பாணம் | 362,055.00 |
| | |






# 'நீங்கள், நீங்களல்ல கிறிஸ்துவே'

## மன்னார் மறைமாவட்ட இயக்குனரின் செய்தி

இல்லறமே நல்லறம். அதில் ஒரு பணியே துறவறம்! அது கிறிஸ்துவுக்கு சான்று பகரும் பணியே குருத்துவம். "நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மகிமை" என்கிறார் ஆண்டவர் இயேசு! (யோவான் 15.8 இதை விபரிக்கிறது)

சீடத்துவம் என்பது, இயேசுவோடு உடனிருப்புக்கான ஓர் அழைப்பு. அது மாபெரும் கொடை. இயேசு தாம் விரும்பியவர்களை, தம்மோடு இருக்கவும், நற்செய்தியை பறைசாற்றவும் அழைத்தார். சீடர்களுடைய நோக்கும், போக்கும் கிறிஸ்துவை சார்ந்ததாக இருக்க வேண்டுமே ஒழிய வேறெதுவும் அவர்களுக்கு தேவையில்லை. அரசாங்கத்தில் ஊழியராவது அன்றாட வாழ்வுக்காக! ஆண்டவருக்கு ஊழியராவது அவரது அன்பைப் பரப்பிட. நற்செய்தி அறிவிப்பென்பது திருமுழுக்கு பெற்ற அனைவரின் பணி. இருப்பினும் ஆண்டவர் ஒரு சிலரைத் தேர்ந்தெடுக்கின்றார். அவர்களே திருத்தூதர்கள், இறையடியார்கள்.

ஆண்டவரின் ஊழியத்தில் ஓய்வு நாள் இல்லை, பகுதி நேரவேலை இல்லை, சம்பள உயர்வு இல்லை, பதவி உயர்வும் இல்லை. ஆனால் தீமையோடு போராட வேண்டும். இயேசுவுக்கு சான்று பகரும் போது பல விதமான எதிர்ப்புக்கள், முட்டுக்கட்டைகள், எதிர்பார்ப்புக்கள், சவால்கள், பிரச்சனைகள் ஏராளம். இவைகளை எதிர் கொண்டு வெற்றி பெற இறைமக்களாகிய நாம் எம்முடைய நாளாந்த செபங்களாலும், வேண்டுதல்களாலும் இறைபணியாளர்களுக்கு தேவையான ஆன்மீக ஒத்தாசைகளை அளிக்கவேண்டும்.

பிறப்பினிலே தகுதியில்லா ஆடவரும் உண்டு, பிறராலே தகுதியில்லாதானவரும் உண்டு, சிறப்பான சேவைக்கு தம்மைத்தாமே கொன்று தேவனுக்கு தொண்டு செய்யச் சென்றவரும் உண்டு, மனிதராலே அண்ணகராக்கப்-பட்டவர்களும் உண்டு, கடவுளாலே அண்ணகராக்கப்பட்ட வரும் உண்டு. ஆனால் இறைவனுக்காக அண்ணகராக்கப்-பட்டவர்களே குருக்கள், துறவிகள் இவர்களே துறவறத்தினர். இயேசு தாம் கொடுக்கவிருக்கும் அளவிற்கேற்ப அருட்கொடைகளை வழங்குகின்றார். இவர்களே மறு கிறிஸ்துக்கள் ஆவோர். எனவே "நீங்கள் நீங்களல்ல கிறிஸ்துவே."

பூக்கும் பூவெல்லாம் மாலையில் கோர்க்கப்படுவதில்லை. கோர்க்கும்போது சில சிந்தப்படுவதும் உண்டு. சிந்தப்படுபவைகள் காலால் மிதிபடுவதும் உண்டு. அவ்வாறே அழைத்தலும் ஊழியமும். அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் தேர்ந்து கொள்ளப்படுவதில்லை. தேர்ந்து கொள்ளப்பட்ட எல்லோரும் நிலைத்திருப்பதும் இல்லை. எல்லோருக்கும் அழைப்பு உண்டு.

ஆண்டவரின் ஊழியத்தில் இலக்கும் ஒன்றே, செய்தியும் ஒன்றே! இயேசுவே அந்த இலக்கும் நற்செய்தியும். இறைபணிக்கு குருத்துவமான துறவறமும் சரி. பொதுக் குருத்துவமானாலும் எல்லோருக்கும் ஒன்றே. இவற்றை நான் ஏற்கெனவே அடைந்து விட்டேன் என்றோ நிறைவு செய்துவிட்டேன் என்றோ சொல்வதற்கில்லை. கிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேறுவதற்காக தொடர்ந்து ஓடுகின்றேன். அன்பர்களே இந்நோக்கம் நிறைவேறிவிட்டது என நான் எண்ணவில்லை. ஆனால் ஒன்று மட்டும் செய்கிறேன் கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதை கண்முன் கொண்டு பரிசுபெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன். இது ஆண்டவர் இயேசுவின் மூலம், கடவுள் எனக்கு மேலிருந்து விடுக்கும் அழைப்பே அப்பரிசாகும். இது தான் "நீங்கள் நீங்களல்ல மறுகிறிஸ்துகள்" என்னும் பரிசு. இது திருத்தூ-தர்களில் பதின்மூன்றாவது திருத்தூதர் புனித பவுல் பிலிப்பியர்களுக்கு கூறியவார்த்தை. (பிலிப்பியர் 3:12-14)

இவ்வாண்டின் சுதேசகுருக்கள் துறவியர் தின கருப்பொருளாகவிருப்பது "நீங்கள்,நீங்களல்ல கிறிஸ்துவே!" ஆகவே அருட்பணியாளர்கள் அனைவரையும் மறு கிறிஸ்துக்களாக வாழ அழைப்புவிடுக்கின்றது. கிறிஸ்துவுக்கு பின் அப்போஸ்தலரின் வழிவரும் ஆயர்களும், அவர்களின் துணையாளராக வரும் குருக்களும், இயேசுவின் குருத்துவத்தை இன்றைய காலத்துக்குள் கொண்டுவர வேண்டும். அறிவு பூர்வமாக மட்டுமல்ல, உணர்வுபூர்வமாகவும், அனுபவப்பூர்வமாகவும் கொண்டுவர வேண்டும். கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வாழ்வை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். (பிலிப்பியர்2:5-8) எம்மை வலியுறுத்துகின்றது. தனது பன்னிரு அப்போஸ்தலர்களை அழைத்ததின் நோக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

அன்று தம் சீடர்களுக்கெல்லாம் அறிவுரை கூற எண்ணி, குன்றின் மேல் ஏறிநின்று, கொடைக்கரம் விரித்துநீட்டி, ஒன்று, இரண்டு என்று எண்ணி, உள்ளதைச் சொல்லி மன்றினைத் தொடக்கிவைத்தார்

15



# அப்போஸ்தலரான புனித பேதுரு சபை

1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் சென் நகரில் ஜான் பிகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழவேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்கவும், இவர்களின் வாழ்வை வளப்படுத்த தேவையான சகல உதவிகளையும், குருமடங்களுக்கும் துறவற சபை இல்லங்களுக்கும் வழங்கவும், தேவ அழைத்தலைப் பெருக்கவும், அதிவிசேடமாக சுதேச குருக்களை உருவாக்கவும், செபத்தாலும், பரித்தியாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருச்சபைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் நோக்கமாகும்.

## சுதேச குருக்கள்/துறவியர் தேசிய சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| கண்டி | 559,615.00 |
| குருணாகல் | 563,150.00 |
| மன்னார் | 290,993.00 |
| இரத்தினப்புரி | 189,950.00 |
| மட்டக்களப்பு | 87,102.00 |
| திருகோணமலை | 205,620.00 |
| **மொத்தம்** | ***7,143,140.00*** |

தேசிய இயக்குனர்
பாப்பிறை மறைப்பரப்புச் சபைகள்
இல. 19. பல்கம் இடம், கொழும்பு - 08
தொலைபேசி / தொலை நகல் 0112685673
மின்னஞ்சல் : ndpmssrilanka@gmail.com
இணையம் : www.pontificalmission.lk



# கிறிஸ்துவின் சாயல்

சீனா நாட்டில் ஒரு சிறுமி இருந்தாள். அவளது ஊரிலிருந்த கத்தோலிக்கக் குரு ஒருவரை அவள் அடிக்கடி கவனித்து வருவாள். அவர் கோவிலில் செபித்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் அவரையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவர் போதிக்கும் பொழுது கவனத்துடன் செவிமடுத்தாள். அவர் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்வதையும் வழியில் வருகிறவர்களுக்கு வந்தனம் கூறுவதையும், எல்லாரோடும் அன்புடன் சல்லாபிப்பதையும் அவள் கவனித்தாள். ஒரு நாள் இந்தச் சிறுமி அடுத்திருந்த ஒரு கிராமத்துக்கு சென்றபோது அங்கு மறைக்கல்வி வகுப்புக்குப் போயிருந்தாள். போதித்துக் கொண்டிருந்த ஒரு சகோதரி கிறிஸ்துநாதருடய பெயரைச் சொல்லாமலே அவர் கடைபிடித்து வந்த புண்ணியங்களை வர்ணித்துக் கொண்டிருந்தார்கள்.


எப்பொழுதும் அன்பாயிருந்து எல்லோருக்கும் உதவி செய்த ஒருவரைப் பற்றி சகோதரி எடுத்துக் கூறினார்கள். புதிதாய் வந்திருந்த அடுத்த ஊர்ச் சிறுமியை அவர்கள் கண்டதும் அவளை அணுகி,

நான் யாரைப் பற்றிப் பேசுகிறேன் என உனக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். ஆம், எனக்குத் தெரியும். எங்கள் ஊரிலுள்ள குருவைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று சிறுமி பதிலளித்தாள்.

**கிறிஸ்து இயேசுவின் மனநிலையைக் கொண்டிருங்கள்**

## உவமையை வாசித்து இடைவெளிகளை பூர்த்தி செய்வோமா...?

(புனித மத்தேயு 13:2-9)



மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்றுகூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்று கொண்டிருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார்:

விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன.

வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப்பகுதியில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக

இல்லாததால் அவை விரைவில் முளைத்தன; .....

..............................................................................

..............................................................................

..............................................................................

.....................

மற்றும் சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கி விட்டன.

ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும்

சில ......................................................................

..............................................................................

..............................................................................

.....................


கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்றார்.

**நான்கு நற்செய்தியாளர்களையும் அறிவோம்**

**புனித மத்தேயு நற்செய்தி**

**ஆசிரியர் : புனித மத்தேயு**
அடையாளம் : மனித முகம்






எழுதப்பட்ட காலம் : கி. பி. 80 - 90ஆண்டுகளில்
இடம் : பாலஸ்தீனா
வேறு பெயர் : இறையாட்சியின் நற்செய்தி
அதிகாரங்கள் : 28
இயேசுவை புதிய மோசேயாகவும், மெசியாவா கவும் காட்டுகின்றார்
அடையாற்றின் நோக்கம்

இயேசுவின தலைமுறை அட்டவணையுடன் இந்நற்செய்தி ஆரம்பிக்கப்படுவதால் இவ் அடை யாளம் வழங்கப்பட்டுள்ளது. புனித மத்தேயு அல்பேயுவின் மகன். வரிதண்டுபவர். இவர் இயேசுவால் அழைக்கப்பட்டார். இவர் யூத கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை எழுதினார். அதனால் இயேசுவின் தலைமுறையை ஆபிரகாமிலிருந்து தருகிறார். யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா கிறிஸ்து ஆவார் என்பதை நற்செய்தியாளர் வலிவுறுத்துகிறார்.

தொடரும்...

ஜூலை 7ம் திகதி ஞான ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுவர் பத்திரிகையில் படங்களைப் பார்த்து சரியாக எழுதிய சிறுவர்களுக்கு

**எமது பாராட்டுகள்**

1. ஏட்ரியன் ஐவன்
   தரம் - 04. புனித பேதுரு கல்லூரி. கொழும்பு .04.
2. ஆன் பிளசினா தரம் 8. கன்னியர் மடம். கொழும்பு. 13
3. ஆரோன் போல்தாஸ் தரம் - 6. புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி. கொழும்பு. 13.
4. S.மிஸ்டிகா தரம் - 7 புனித அன்னம்மாள் பாடசாலை
5. சைனி தரம் 6. கொழும்பு நல்லாயன் மகளீர் மகா வித்தியாலயம்.




## விவிலியப் பகுதி



### மாற்கு நற்செய்தி

**4ஆம் அதிகாரம்**

56. நல்ல நிலத்தில் விழுந்த விதைகளால் பயன் என்ன?
57. இறையாட்சியின் மறை பொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது என்று கூறியது யார்?
58. இயேசு விதைப்பவர் உவமையில் விதைகள் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?
59. நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு யாரிடம் கூறினார்?
60. இறையாட்சியை இயேசு எந்த உவமையோடு ஒப்பிட்டுக் கூறினார்?
61. இறையாட்சியை மேலும் எதற்கு ஒப்பிடலாம்,?
62. கடுகு விதை சிறியதாக இருந்தாலும் அது முளைத்து பெரிய செடியாகியபின் அதன் நிழலில் வந்து தங்கக்கூடியவை எவை?
63 இயேசு தனிமையாக இருந்தபோது உவமைகள் வழியாக இறைவார்த்தையை யாருக்கு விளக்கிச் சொன்னார்?
64. இயேசு கடல் பயணம் யாருடன் சென்றார்?

15ம் பக்கம்

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

**மேலே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் ஆடி 27ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.


**நிறம் தீட்டுக**



மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



# உன்னைப்போல் ஒருவன் உலகில் இல்லை.

நடுங்காதே நண்பா, நீ தனித்தன்மை கொண்டவன். உனக்குள்ளும் இருக்கிறது. எங்குமே இல்லாத இன்னொரு உலகம்.

வயலில் அதிகம் இருந்தால் விளைச்சலைக் கொடுக்கும் என்ற பயன்பாடு மண் புழுவுக்கே உண்டென்றால் உனக்கு இல்லாமலா போகும்?

சாணத்தை மிதித்து அமுக்கி வைத்தால் எரிசக்தியே தருமென்றால் இறைவனின் சாயலான உனக்குள்ளும் ஒரு சக்தி பிறக்காதா என்ன?

பெட்ரோலின் கடைசி கழிவுதான் தார்ச்சாலையின் மூலப்பொருள்! பசுமாட்டின் கழிவுதான் கிரிமி நாசினி! சூரியனின் சிறு சிதறல்தான் பூமி உருண்டை!

இந்த உலகில் நீ எனக்குக் கிடைத்ததற்கு அரிய ஓர் அற்புதம் உன்னைப் போன்று உள்ளவன் நீ ஒருவன்தான் நீ ஒரு விலை மதிப்பில்லாப் பொக்கிஷம்.

உலகம் உண்டானது முதல் இன்றுவரை வாழும் கோடிக்கணக்கான மனிதர்களில் ஒருவர் கூட உன்னைப் போலவே இருக்கவில்லை. இனியும் இருக்கப்போவதில்லை. நீ ஒருவன் மட்டும்தான்.

நீ தனித்தன்மை கொண்ட ஒருவனாய் உன் தாயின் கருவறையில் உதயமானாய் தனித்தன்மை கொண்டவனாய் இவ்வுலகில் பிறந்தாய் தனித்தன்மை கொண்டவனாய் இன்று வாழ்ந்து வருகின்றாய்.

இத்தனித்தன்மைதான் உனக்கிருக்கும் பெரிய சொத்து. குட்டையான மனிதர்களையும் உயரமான மனிதர்களையும் நான் படைக்கிறேன். ஒல்லியான மனிதர்களையும் பருமனான மனிதர்களையும் நான் படைக்கின்றேன். கறுப்பு நிற மனிதர்களையும் வெள்ளை நிற மனிதர்களையும் நான் படைக்கின்றேன்.

ஒவ்வொரு நாட்டு மக்களையும் நான் படைகின்றேன். ஆனால் உயரத்தைப் பற்றியோ, உருவ அமைப்புப் பற்றியோ நிறம் பற்றியோ நான் கவலைப்படுவதில்லை. ஒவ்வொருவரும் எனக்கு தனித்தன்மை உடையவர்களே! உனக்குத் தெரியுமா? உன்னைப் படைத்த பிறகு உன்னைப் படைத்த அச்சை நான் உடைத்து விட்டேன்! காரணம் தெரியுமா?

உன்னைப் போலவே இன்னொருவர் இருப்பதை நான் விரும்பவில்லை. உன்னைப் போலவே இருப்பவன் நீ ஒருவன்தான். உனது தனித்தன்மை தான் நீ பெற்றுள்ள பெரிய முத்து.

நான் சொல்வதைக் கேள்! உனது தனித்தன்மையை இனியும் மறைத்து வைக்காதே! வெளியே கொண்டு வா! உலகிற்கெல்லாம் காட்டு! ஒவ்வொருவரும் உனது ஒளியைக் காணும்படி அதை விளக்குத் தண்டின் மீது வை. நீ அவ்வாறு செய்யவில்லை என்றால் உனது தனித்தன்மை நீ இறக்கும்போது அதுவும் உன்னோடு புதைக்கப்பட்டுவிடும்! நான் உன்னைக் குறித்துப் பெருமைப்படுவதுபோல் நீயும் உன்னைப் பற்றிப் பெருமைப்பட வேண்டும்.

எனவே! உன்னை நீயே தரக்குறைவாய் எண்ணாதே! உனது மதிப்பைக் குறைத்து எடை போடாதே! உன்னைத் தாழ்வாக எண்ணாதே! உன்னையே நீ வெறுக்காதே!

நீ நல்லவன்! நீ உயர்ந்தவன்! நீ பல திறன்கள் கொண்டவன்! நீ பல ஆற்றல்களை உடையவன்! நீ பல அதிசயங்களுக்குச் சொந்தக்காரன்.

எனவே சுய வெறுப்புத் தேவையில்லை சுய விமர்சனம் தேவையில்லை தாழ்வாக மதிப்பிடத் தேவையில்லை ஒதுங்கி வாழும் நிலை தேவையில்லை என்னிடம் ஒன்றும் சரியில்லை என்ற எண்ணம் தேவையில்லை

---


# தேர்வுக் களம்

### தேர்வு எழுதும்போது நாம் எதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்? என்ன சாதிக்க வேண்டும்? அதை எப்படிச் சாதிப்பது?

180 மணித் துளிகள், மிகவும் முக்கியமான அந்த 180 நிமிடங்கள். ஆண்டு முழுவதும் நாம் ஒரு பாடத்தைப் படித்துப் புரிந்து பயிற்சி எடுத்துக்கொண்டதன் விளைவை அறுவடை செய்ய நமக்குத் தரப்படும் வாய்ப்பு, மூன்று மணி நேரம்தான் ஆண்டு முழுவதும் நாம் வளர்த்துக்கொண்ட திறமைகளை வெளிக்காட்ட வேண்டிய நேரம் இது.

தேர்வை நாம் எப்படி எழுதப்போகின்றோம். கொடுக்கின்ற விதிகளுக்குள் நாம் எப்படி நாம் நம்முடைய முழும் திறமையையும் வெளிப்படுத்துவது. இவைதான் தேர்வு எழுதுபவர்களின் சிந்தனையில் ஓடிக்கொண்டிருப்பது. தேர்வு எழுதுவது எப்படி? தேர்வு எழுதும்போது நாம் எதைக் கவனிக்க வேண்டும்? தேர்வை நாம் கயிற்றில் நடக்கும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். இங்கே இரண்டு பணிகளை நாம் செய்ய வேண்டும். கேள்விகளுக்கு உரிய துல்லியமான விடைகளை எழுத வேண்டும். இது முதல் பணி. அந்த முயற்சியைக் குறிப்பிட்ட 180 நிமிடங்களில் எழுத வேண்டும். எல்லாக் கேள்விகளுக்கும் துல்லியமான விடைகளை எழுத இந்த நேரத்தை நாம் சரியாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இது இரண்டாவது பணி.

180 மணித் துளிகள், மிகவும் முக்கியமான அந்த 180 நிமிடங்கள். ஆண்டு முழுவதும் நாம் ஒரு பாடத்தைப் படித்துப் புரிந்து பயிற்சி எடுத்துக் கொண்டதன் விளைவை அறுவடை செய்ய நமக்குத் தரப்படும் வாய்ப்பு,



முழுமையான துல்லியமான விடை எழுதுகிறேன் என்று நேரத்தை இழந்துவிடவும் கூடாது. விரைவாகவும் எழுதவேண்டும் என்று நினைத்து அரைகுறை விடை எழுதவும் கூடாது. இரண்டு முயற்சிகளும் வெற்றிபெற வேண்டும். அதுதான் சமச்சீர் பயணம். கயிற்றின் மேல் நடக்கும் பயணம்.

ஆண்டு இறுதித் தேர்வுககான பயிற்சிக் களங்கள் தான் பாடசாலையில் நடக்கும் தேர்வுகள். ஒவ்வொரு தேர்வுக்கும் நாம் கவனமாகப் படிக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, படித்ததைத் தேர்வில் துல்லியமாகவும், சரியான வேகத்திலும் எழுதும் பழக்கத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். துல்லியமான விடை, சரியான வேகம், இந்த இரண்டு மையக் குறிக்கோள்களையும் எட்டுவதற்கு நாம் பயன்படுத்த வேண்டிய சில உத்திகளைப் பயன்படுத்திப் பழகுவோம். ஆண்டுத் தேர்வில் இந்த உத்திகள் நிச்சயம் நல்ல பலன் தரும்.

### 1. திட்டத்தோடு தேர்வைச் சந்திப்போம்.

ஒவ்வொரு தேர்வுக்கும் செல்லும் முன்னாலேயே நாம் தேர்வுக்களத்தில் செய்யப்போகும் பல பணிகளைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். சில எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம். ஒன்று ஒவ்வொரு கேள்விக்கும் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் எனப்தை நாம் முடிவு செய்துகொள்ளலாம். 180 நிமிடத் தேர்வு என்று வைத்துக் கொள்வோம். இதில் கேள்விகளை வாசித்து நாம் எழுதப் போகும் கேள்விகளைத் தேர்ந்தெடுக்க ஐந்து நிமிடம். கடைசியில் திருப்பிப் பார்க்க 15 நிமிடம் ஒதுக்கலாம். 100 மதிப்பெண்களுக்கு நமக்கு எஞ்சி நிற்கும் 160 நிமிடங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதுதான்.

ஒரு 10 மதிப்பெண் கேள்விக்கு 16 நிமிடம். இந்தச் சராசரி வேகம் நம் மனதில் இருக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்துக்குரிய வினாத்தாளின் அமைப்பும் நமக்குத் தெரிந்ததுதான். எனவே, ஒவ்வொரு பகுதிக்கும் அதில் உள்ள ஒவ்வொரு கேள்விக்கும் நமக்கிருக்கும் நேரம் நினைவில் இருக்க வேண்டும். இரண்டு, கேள்விகளுக்கான விடைகளை எந்த வரிசையில் எழுதுவது என்பதை நாம் முடிவு செய்துகொள்ளலாம். எந்தக் கேள்விகளை நம்மால் விரைவாக எழுதிவிட முடியுமோ அவற்றை முதலில் எழுதிவிட வேண்டும். இதுதான் பொதுவான உத்தி. இப்படிச் செய்தால் இதில் மிச்சமாகும் நேரத்தை நாம் மற்ற கேள்விகளுக்குப் பகிர்ந்துகொள்ளலாம். இதுதான் இந்த உத்திக்கான காரணம்.

கேள்வித்தாள் அமைப்பே பொதுவாக இந்த அடிப்படையில்தான் வரிசைப்படுத்தப்படுகிறது. 1, 2, 5, 10, 20 மதிப்பெண் என்று சிறிய கேள்விகள் முதலில் வரும். ஆனால், நம்மில் சிலருக்கு 1 மதிப்பெண் கேள்விகளுக்கு அதிகம் யோசிக்க வேண்டி வரலாம். 5 மதிப்பெண் கேள்விகளுக்கு விடைகள் மிக நீளமாக இருப்பதாகத் தோன்றலாம். நம்முடைய அனுபவங்களின் அடிப்டையில் நாம் பொதுவாக விடை எழுத விரும்பும் வரிசை முறையைத் தேர்ந்துகொள்ளலாம். மூன்று, பொதுவாக எத்தகைய கேள்விகளை நாம் தேர்ந்துகொள்ள விரும்புகிறோம் என்பதையும் முன்கூட்டி முடிவு செய்யலாம். சிலர் மனப்பாடத்தில் அதிகத் திறமையுடையவர்களாய் இருப்பார்கள். இவர்கள் அதிகம் யோசிக்கத் தேவையில்லாத கேள்விகளை எடுத்துக்கொள்ளலாம். வேறு சிலர் வரையறை, ஒப்பிடுக. வேறுபாடு காட்டுக போன்றவை கேள்விகளுக்குத் துல்லியமாக விடை எழுதுவார்கள். வேறு சிலர் நன்றாகக் கணக்குப் போடுவார்கள். சூத்திரங்களைப் பயன்படுத்துவார்கள். தேர்வுக்களத்தில் வினாத்தாளை வாசிக்கும்போது நமக்கு ஏற்ற கேள்விகளைத் தேர்ந்தெடுக்க, நம்முடைய இந்த வகைத் திறமைகளை நாமே எடைபோட்டு வைத்துக் கொள்வது பயன்படும். நான்கு, பள்ளித் தேர்வுகளில் நாம் நன்றாக எழுதி முழு மதிப்பெண் பெற்ற கேள்விகளை நினைவுபடுத்திக் கொள்ளலாம். இந்தக் கேள்விகள் வந்தால் அவற்றை உடனே தேர்ந்தெடுக்க வேண்டியதுதான். இந்த முன் தயாரிப்புப் பழக்கத்தை வளர்த்துக்கொண்டால் நாம் தேர்வுத் தாளைச் சந்திப்பதும், சாதிப்பதும் எளிதாகிவிடும்.....

தொடரும்

# ஒப்புரவு அருள்சாதனத்தின் இரகசியம் உடைக்கப்பட முடியாதது



ஒப்புரவு திருவருட்சாதனத்தில் கேட்கும் விடயங்களை வெளிப்படுத்த வேண்டுமென்று, அரசியல் அல்லது எவ்வித சட்டமுறைப்படி அருள்பணியாளர்கள் கட்டாயப்படுத்தப்படுவது, சமய சுதந்திரத்தை மீறுவதாகும் என்று, திருப்பீடம், அறிவித்துள்ளது. ஆஸ்திரேலியா, கலி.ஃ.போர்னியா மற்றும், உலகின் ஏனைய பகுதிகளில், ஒப்புரவு அருள்சாதனத்தின் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்படுவதையொட்டி, “ஒப்புரவு திருவருள்சாதனத்தில் கூறப்பட்டவைகள் குறித்து, இரகசியம் காப்பதன் முக்கியத்துவம் மற்றும் அதன் அருள்சாதன உடைபடா முத்திரை” என்ற தலைப்பில், திருப்பீட பாவமன்னிப்பு சலுகை அமைப்பு, ஆடி 01, திங்களன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஒப்புரவு அருள்சாதனத்தின் முத்திரை, உடைக்கப்பட முடியாதது என்பதை மீண்டும் உறுதிசெய்துள்ள திருப்பீட பாவமன்னிப்பு சலுகை அமைப்பு, திருஅவையின் வாழ்வில் இரகசியம் காக்கப்படவேண்டிய ஏனைய கூறுகளின் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை, ஒப்புரவு அருள்சாதனத்தின் முத்திரை, ஒருபோதும் உடைக்கப்பட முடியாதது என்பது, அருள்பணியாளர்கள், ஒப்புரவு அருள்சாதனத்தில் கேட்டவைகளை, வெளிப்படுத்த வேண்டுமென்று, ஒருபோதும் கட்டாயப்படுத்தப்படக் கூடாது என்று அர்த்தமாகும் என உரைத்துள்ளது. தனது தவறுக்காக வருந்தி, ஒப்புரவு அருள்சாதனம் பெற வருபவருக்கு, உண்மையாக இருப்பது, கிறிஸ்து மற்றும் திருஅவையின், தனித்துவமிக்க மற்றும், உலகளாவிய மீட்பிற்குச் சாட்சியாக இருப்பது ஆகியவற்றின் அடையாளங்களாக, அருள்பணியாளர்கள் விளங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ள அவ்வறிக்கை, இதில், இரத்தத்தைச் சிந்தும் நிலை வந்தாலும்கூட, ஒப்புரவு அருள்சாதனத்தின் முத்திரையை, அருள்பணியாளர்கள் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. ஒப்புரவு அருள்சாதனம், திருஅவையின் உள்ளே நிகழ்வதாகும், இது திருஅவைக்கு வெளியே இடம்பெற இயலாதது என்றும், அவ்வாறு இடம்பெறுவது, அருள்பணியாளரை நம்பி, தனது சொந்த நிலையை அல்லது சூழலை வெளிப்படுத்தி, அதற்காக மன்னிப்பு கேட்கும் மனிதரின் மாண்புக்கு எதிரான பாவம் என்று, திருத்தந்தை கூறியிருப்பதை இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

# உலகளவில் பசியால் வாடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

உலகளவில் பசி, உணவு பாதுகாப்பின்மை மற்றும் சத்துணவு பற்றாக்குறைவால், 82 கோடியே பத்து இலட்சத்துக்கு அதிகமான மக்கள் துன்புறுகின்றனர் என்று, ஜூலை 15, இத்திங்களன்று ஐ.நா. நிறுவனங்கள் வெளியிட்ட அறிக்கை கூறியது.

உலகில், உணவு பாதுகாப்பின்மை மற்றும் சத்துணவு என்ற தலைப்பில், ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, குழந்தை நல நிதி அமைப்பு, உலக நலவாழ்வு அமைப்பு, உலகலாவிய வேளாண்மை வளர்ச்சி நிதி அமைப்பு, உலக உணவு திட்ட அமைப்பு ஆகியவை இணைந்து வெளியிட்ட அறிக்கையில், உலகளவில் பசியால் வாடுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்நிலையில் எந்த மாற்றமும் நிகழவில்லை என்று கூறும் அவ்வறிக்கை, 2017ம் ஆண்டில் 81 கோடியே 17 இலட்சமாக இருந்த இவ்வெண்ணிக்கை, 2018ம் ஆண்டில் சற்று அதிகரித்து, அது 82 கோடியே 16 இலட்சமாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையை செய்தியாளர் கூட்டத்தில் வெளியிட்டுப் பேசிய, ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் இயக்குனர் Jose Graziano da Silva அவர்கள், உலகில் பசியால் வாடுவோரின்



எண்ணிக்கை, பல ஆண்டுகளாகக் குறைந்து வந்தவேளை, 2015ம் ஆண்டில் அவ்வெண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என்று தெரிவித்தார். உலகில் பரவலாக நிலவிவரும் சத்துணவு பற்றாக்குறைவால், ஆப்ரிக்காவில் ஏறத்தாழ இருபது விழுக்காட்டினரும், ஆசியாவில் 12 விழுக்காட்டிற்கு அதிகமானோரும், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் ஏழு விழுக்காட்டினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பசி தொடர்புடைய விவகாரங்களால், ஏறத்தாழ 14 கோடியே 90 இலட்சம் சிறாரின் வளர்ச்சி தாமதமாகியுள்ளது என்றும், அவ்வறிக்கை கூறியுள்ளது. (UN)

# துன்புறும் மக்களுடன் திருத்தந்தையின் அருகாமை



வெனிசுவேலா நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் நெருக்கடிகளால் துன்புறும் அந்நாட்டு மக்களோடு தன் அருகாமையை வெளியிடுவதாக ஞாயிறன்று அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்தவர்களின் பிறரன்பு குறித்து எடுத்துரைத்த ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில், வெனிசுவேலா நாட்டின் துன்பநிலைகள் குறித்து தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டு மக்கள், மற்றும், அப்பகுதியில் உள்ள ஏனைய நாடுகளில் வாழும் மக்களின் நலனை மனதில் கொண்டு, நல்ல முடிவுகள் விரைவில் எடுக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

மக்களின் துயர்நிலைகளை அகற்றுவதற்கு நல்லதொரு தீர்வைக் கொணரும் பொறுப்பிலுள்ள அனைத்து தரப்பினரையும் இறைவன் தூண்டி, அவர்களுக்கு ஒளியூட்ட வேண்டும் என நாம் அனைவரும் செபிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.







## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“கார்மேல் அன்னை மரியா திருவிழாவான இன்று நாம், கிறிஸ்துவின் சிலுவையருகில் நின்ற கன்னி மரியா பற்றித் தியானிக்கிறோம், அது, கிறிஸ்துவுக்கு நெருக்கமான திருஅவையின் இடமும்கூட”

“கடல் பயணிகள் மற்றும் மீனவர்களுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்தக் கடல் ஞாயிறன்று, அவர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் செபிக்கும் அதேவேளை, அவர்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஊக்கமளிக்கிறேன்”,

“இன்றைய நற்செய்தி வாசகத்தில், நல்ல சமாரியரை நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இயேசு முன்வைக்கிறார். தனக்கு அடுத்திருப்பவரை அன்புகூர்வதன் வழியாக கடவுளை எவ்வாறு முழு உள்ளத்தோடு அன்புகூர்வது என்பதைக் காட்டும் நல்ல சமாரியர், உண்மை மத உணர்வு பற்றியும், முழு மனித சமுதாயமும் எப்படி வாழவேண்டும் என்பதையும் காட்டி நிற்கிறார்”.

“தொடர்ந்து நெருக்கடிகளால் துன்புறும் மக்களோடு என் அருகாமையை அறிவிக்கிறேன். இம்மக்களின் துன்பங்களை அகற்றிடும் பொறுப்பிலுள்ளோர் விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள இறைவன் உதவ வேண்டுமாறு செபிப்போம்”.

“நாம் கடவுளின் அன்புக் குழந்தைகள் என்பதை, ஆழமான மற்றும் அழகான பற்றுறுதியுடன் வாழச் செய்வது, விசுவாசம் எனும் கொடையே”

“இறைவன், வின்செண்ட் லாம்பெர்ட்டை தன் கரங்களில் அரவணைத்து வரவேற்பாராக. வாழத் தகுதியற்றவர்கள் என்று நாம் எண்ணும் மனிதரை, வீசியெறியும் கலாச்சாரத்தை, நாம் உருவாக்காமல் இருப்போமாக: ஒவ்வொரு உயிரும் மதிப்புள்ளது, எப்போதும்”

“வாழ்வதற்கு யார் தகுதியுடையவர், யார் தகுதியற்றவர் என்ற தெரிவுகளை மேற்கொள்ளாமல், ஒவ்வொரு வாழ்வையும், அதன் ஆரம்பம் முதல் இயற்கையான இறுதி வரை காப்பதே, மனிதாபிமானம் உள்ள சமுதாயம்”.

“தீவிர நோய்களோடு வாழ்ந்துகொண்டிருப்போருக்காக செபிப்போம். இறைவனின் கொடையான வாழ்வை அதன் தொடக்கத்திலிருந்து இயற்கையான முடிவுவரை, பாதுகாப்போம். தூக்கியெறியும் கலாச்சாரத்திற்கு நம்மை உட்படுத்தாதிருப்போம்”

“யுத்தனேசியா, மற்றும், மருத்துவ உதவியுடன் நடைபெறும் தற்கொலை, நம் அனைவருக்குமே ஒரு தோல்வி. விரக்தியால் தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ள விழைவோரை, அப்படியே விட்டுவிடாமல், அவர்வளுக்கு நம்பிக்கையூட்டுவது நம் கடமை”


“ஆதரவின்றி, இறப்பதற்கு விடப்படும் நோயுற்றோருக்காக நாம் செபிக்கிறோம். வாழ்வதற்கு யார் தகுதியுடையவர், யார் தகுதியற்றவர் என்ற தெரிவுகளை மேற்கொள்ளாமல், ஒவ்வொரு வாழ்வையும், அதன் ஆரம்பம் முதல் இயற்கையான இறுதி வரை காப்பதே, மனிதாபிமானம் உள்ள சமுதாயம். மருத்துவர்கள், வாழ்வைக் காக்கும் பணியில் ஈடுபடவேண்டுமேயொழிய, அதை எடுப்பதற்கு அல்ல.”

# இறை ஊழியர் ஃபுல்டன் ஷீன் பரிந்துரையால் புதுமை

போதகர்கள் சபையைச் சார்ந்த, போர்த்துக்கல் நாட்டு அருளாளர், மறைசாட்சிகளின் பர்த்தலோமேயு அவர்களை, கத்தோலிக்கத் திருஅவையின் புனிதர்கள் பட்டியலில் இணைத்து, அவரின் பெயரில் நடைபெறும் திருவழிபாட்டுக்கும் அனுமதியளித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

புனிதர்கள் பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ பெச்சு அவர்கள், ஆடி 05, வெள்ளியன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, திருப்பீடத்தில் சந்தித்து, அருளாளர் மறைசாட்சிகளின் பர்த்தலோமேயு அவர்கள் பற்றிய...

தொடர்ச்சி 15ம் பக்கம்



# ஓர் இனிய உதயம்




"என்ன விமலா, அலுவலகத்திலிருந்து சீக்கரமே வந்துட்டியா?" மனைவியிடம் கேட்டவாறு உள்ள நுழைந்தார் லாரன்ஸ்

"ஆமாங்க, சீக்கிரமா அலுவலகத்தில் அனுமதி வாங்கிட்டு வந்து அங்க இங்க கையக்காலப் பிடிச்சு உங்க அம்மா அப்பாவுக்கு முதியோர் இல்லத்தில் இடம் வாங்கிட்டேன். ஆம்பிளைப் பிள்ளை இருந்தா, இடம் தரமாட்டாங்களாம். நமக்கு வருமானம் இல்ல. அப்படி இப்படின்னு சொல்லி சமாளிச்சிருக்கேன். சீக்கரம் கொண்டு விட்டுட்டு வந்திடுங்க" உற்சாகமாகச் சொன்னாள் விமலா.

"அது சரி, இவ்வளவு தைரியமா பேசற, எங்க அம்மா, அப்பா வீட்ல இல்லையா?" ஆச்சரியமுடன கேட்டான் லாரன்ஸ். "உங்க அப்பா ரேஷன் கடைக்கு போயிருக்காங்க. உங்க அம்மா நம்ம மகள பள்ளிக்கூடத்தில் இருந்து கூப்பிடப் போயிருக்காங்க"

"அதானே பார்த்தேன்... விமலா! எங்க அம்மா அப்பா நமக்கு எவ்வளவு உதவியா இருக்காங்க. அவங்க முதியோர் இல்லத்துக்குப் போயிட்டாங்கன்னா, நீ வேலைக்குப் போய்ட்டு வந்து, எப்படி தனியா வீட்டு வேலையெல்லாம் பார்ப்ப?" ஆதங்கத்தோடு வினவினான் லாரன்ஸ்.

"இதப்பாருங்க... என்மேல கரிசனம் காட்டுற மாதரி பேசி அம்மா அப்பாவை இங்க வச்சிக்கிறலாம்னு பார்க்காதீங்க. நான் எல்லாம் சமாளிச்சிடுவேன். கல்யாணம் முடிஞ்ச நாள்ல இருந்து தனிக்குடித்தனம் போகலாம்னு கேட்டேன். நீங்க கேட்கல. இவ்வளவு காலம் வச்சுப் பார்த்தாச்சு. ஐந்து பேருக்கு சாப்பாடு, துணிமணின்னு எவ்வளவு செலவாகுது. உங்க அம்மா அப்பா எவ்வளவு நாளைக்கு உதவியா இருப்பாங்க? அவங்களுக்கும் வயசாகிட்டு போகுது. இனி மருந்து மாத்திரை, மருத்துவமனைன்னு அலையணும். வேலைக்குப் போற எனக்கு அவங்களுக்கு பணிவிடை செய்ய முடியாது. நம்ம பொண்ணு வேற வளர்ந்துட்டா. காசு பணம் சேர்க்கணும். அதுபோக அவங்க இருக்கிறதாலே நம்மால தனியா பேசி குடும்பத்தைப் பத்தி திட்டம் போடக்கூட முடியல. இடைஞ்சலா இருக்காங்க" புலம்பினாள் விமலா.

"கொஞ்சம் பொறு விமலா. நம்ம கோயில்ல பாத்திமா மாதா திருவிழா முடியட்டும். நவநாள் தொடங்கிட்டு. அவங்க நம்மோட இருந்து திருவிழா பார்த்த பிறகு அனுப்பி வைப்போம்" அரை மனதுடன் சம்மதித்தான் லாரன்ஸ்.

"ஹும்... உயிருக்கு மேலா என்ன பெற்று வளர்த்த-வங்களுக்கு இந்தக் கதியா?" வாய்க்குள் முணங்கினான். "ஏதோ சொன்ன மாதிரி இருக்கு" குறுக்கிட்டாள் விமலா. "ஒண்ணுமில்லம்மா.... நானும் முதியோர் இல்லத்துக்குப் போயிடுவேனோன்னு யோசிச்சேன். நீ டிபனைக் கொண்டா..." முடித்தான் லாரன்ஸ். "இந்தக் குத்தல் பேச்சுக்கு மட்டும் குறைச்சல் இல்லை" என்றபடி சிற்றுண்டியை எடுத்து வைத்தாள்.

"என்னங்க... திருநாளைக்கு புதுச்சேலை வாங்கணும் அம்மா வீட்டுக்குப் போய் தங்கச்சியக் கூட்டிட்டு கடைக்குப் போய்ட்டு இன்று தாமதமா வருவேன்"னு காலையிலேயே வேலைக்குப் போகும்-போது அனுமதி வாங்கிச் சென்றாள்.

"அண்ணி, அக்கா வந்திருக்கா... கொஞ்சம் காபி போட்டுத் தர்றீங்களா.." உத்தரவிட்டாள் தங்கை சித்ரா. "ஜெயா கோயிலுக்குப் போய்ட்டு வந்திருக்கேன். எனக்கும் சேர்த்து காபி போடு" அதிகாரமுடன் கேட்டாள் அம்மா சவுந்தரி. என்னம்மா இரு, அண்ணி வேலைக்குப் போயிட்டு வர்றாங்க. அவுங்களைப் போய் வேலை வாங்குறீங்களே" பரிந்தாள் விமலா. சும்மா இரு. நம்ம கைல அதிகாரம் இருந்தாத்தான் அடங்கி இருப்பா. அவ அதிகாரம் ஓங்கிட்டா, அப்புறம் நம்ம கதி அவ்வளவுதான். நாம வெளியே போக வேண்டியிருக்கும். பெத்து வளர்த்து ஆளாக்கிய மகனை இவ கைல போட விடலாமா?" அறிவுப் பூர்வமாகப் பேசினாள் அம்மா.

"அம்மா! நான் வீட்டுக்குப் போறேன். இன்னொரு நாள் கடைக்குப் போகலாம்" ஏதோ மனக்குழப்பத்துடன் வெளியேறினாள் விமலா. குடும்பம் குடும்பமாய் ஆலயத்தில் மக்கள் கூட்டம் குவிந்து கொண்டிருந்தது. கூட்டத்தின் சலசலப்பினைக் கிழித்துக் கொண்டு ஒரு குடும்பம் தாயை சக்கர நாற்காலியில் வைத்து கூட்டத்தின் நெரிசலில் அழைத்து வருவதைப் பார்த்து அனைவரும் வியந்தனர்.

மகனும் மருமகளும் இரு பக்கத்திலும் நாற்காலியைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் முகத்தில் அத்தனைப் பரிவு. அத்தாயின் முகத்தில் அத்தனை மலர்ச்சி. "இப்படியும் கூட்டத்துல திருநாள் பார்க்கணுமாக்கும். வீட்டி முடங்கிக் கிடக்க வேண்டியவர்களை யார் வரச் சொன்னார்" கூட்டத்தில் முணங்கிய சப்தம் கேட்டது.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## வானமே பொழிந்திடுவாயே



**வறட்சி நீங்க வானமே பொழிந்திடுவாயே.....**

வறட்சி நீங்கிட, வாழ்வு செழித்திட,
வையகம் குளிர்ந்திட, வானமே பொழிந்திடுவாயே.

பயிர்கள் வளர்ந்திட, உயிர்கள் வாழ்ந்திட,
உழவர் மகிழ்ந்திட, வானமே
பொழிந்திடுவாயே.

நீர் வளம் கிடைத்திட, நீர் நிலை நிரம்பிட,
நீக்கமற பசுமையாகிட, வானமே பொழிந்திடுவாயே.

போதுமாய்ப் பொழிந்திடுவாயே,
பெரு வெள்ளமாய் வந்திடாதே,
பெருந்துயர் தந்திடாதே,
அளவோடு பொழிந்திடுவாயே,
வளமோடு வாழ்ந்திடுவோமே.

ஆக்கம்:
பென்ஜமின் சோமநாதர்.

## புனித சுவக்கீன், புனித அன்னம்மாள்

சுவக்கீன் என்றால் "ஆண்டவரது தயாரிப்பு" என்பது பொருள். அன்னா என்றால் "இறைவனது அருள்" என்று பொருள். அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தார். நாசரேத்தில் வாழ்ந்த சுவக்கீன் என்பவரை மணந்தார். இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தைகள் இல்லை. பிறகு மரியாள் பிறந்தார். மரியாளுக்கு மூன்று வயது ஆனதும் தேவாலயத்திற்குச் செல்லும்படி அவரைக் கடவுள் அழைத்தார். சுவக்கீனும் அன்னம்மாளும் தியாக குணம் படைத்தவர்கள். நெடுங்காலமாய் தவம் இருந்து கடவுளை மன்றாடிப் பெற்றெடுத்த அழகிய குழந்தையை கடவுளுக்கு இவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

ஆதிலியிருந்தே புனித அன்னம்மாளை விசுவாசிகள் வந்தித்து வந்திருக்கிறார்கள். இவருக்குத் தோத்திரமாக கோவில்கள் கட்டப்பட்டன. கிழக்கிந்திய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் இவரது




பரிசுத்த தனத்தைப் பற்றியும் இவர் பெற்ற வரங்களைப் பற்றியும் அழகாக கூறியிருக்கிறார்கள். 4ம் நூற்றாண்டில் புனித சுவக்கீனுக்குத் தோத்திரமாக ஜெருசலேமில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

### சிந்தனை:

**"சுவக்கீனே! அன்னம்மாளே! நீங்கள் பேறுபெற்றவர்கள், பாவத்தினின்று மிக உறுதியாக விடுதலை பெற்றவர்கள். உங்கள் வயிற்றின் கனியிலிருந்தே இதனைத் தெரிந்துகொள்ளலாம். நம் ஆண்டவர் கூறவில்லையா, அவர்களின் கனியிலிருந்து அவர்களை அறியலாம் என்று? உங்களின் நடத்தை இறைவனுக்கு உகந்ததாயிருந்தது. அத்துடன் உங்கள் வயிற்றிலிருந்து தோன்றவிருந்த கனிக்கு மிகப் பொருத்தமாகவும் உள்ளது. உங்களிருவரின் மாசற்ற, புனித வாழ்க்கையின் மரபில், கன்னிமையின் அணிகலனாகிய மரியை உலகிற்குக் கொணர்ந்தீர்கள். இவள் (இறைவனை) ஈன்றெடுக்கு முன்பும், ஈன்றபொழுதும், ஈன்றெடுத்த பின்னரும், ஒரே சொல்லில், முப்பொழுதும் கன்னியானவள், புனிதமானதும் ஒழுக்கத்தில் சிறந்ததுமான வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து, வானதூதர்களுக்கும் மேலான ஒரு பெண்ணைப் பெற்றீர்கள். ஓ! ஆதாமின் செல்வக் குழந்தையே, இறைவனின் தாயே உம்மை ஈன்றெடுத்த பெற்றோர் வாழ்த்தப் பெறுவார்களாக"**

**இப்பகுதி புனித தாமசீன் அருளப்பரின் விரிவுரையில் இருந்து எடுக்கப்பட்டது.**

# ஒளி வீசும் விண் மீன்!!

## திருத்தூதர் பெரிய யாக்கோபு! ஆடி 25

## இம்மாதப் புனிதர்

**சிந்தனை: ஞானிகள் வானத்தின் போராளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர், விண் மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளி வீசித் திகழ்வர்**

**(தானியேல் 12:3)**

இயேசு தேர்ந்தெடுத்த திருத்தூதர்கள் பன்னிரண்டு. அவர்களில் அல்பேயுவின் மகன் யாக்கோபும் குறிப்பிடப்படுகிறார். இவர்களுள் செபதேயுவின் மகனான யாக்கோபு மிகவும் பிரபலமானவர். இவரை பெரிய யாக்கோபு என அழைப்பர். உண்மையில் இவரை ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு பெயரால் குறிப்பிடுவார்கள். ஆங்கிலத்தில் ஜேம்ஸ் என்றும், பிரெஞ்சு மொழியில் ஜாக்குஸ் என்றும், இத்தாலிய மொழியில் ஜிக்கோமோ என்றும், லத்தீன் மொழியில் ஜேக்கப் என்றும் புனித யாகப்பர் என பொருள்படும் சந்தியாகப்பர் என பொதுவாக அழைப்பதுண்டு. இப்போது தமிழில் யாக்கோபு என அழைக்கின்றனர்.

இவர் பிரபலமானதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று இயேசு இவருக்குக் கொடுத்த முக்கியத்துவம். இயேசுவின் வாழ்வில் முக்கிய தருணங்களில், நிகழ்வுகளில் அவர் தனது திருத்தூதர்களுள் மூன்று பேரை தன்னுடன் அழைத்துச் சென்றார். அவர்கள் பேதுரு, யாக்கோபு மற்றும் அவர் சகோதரர் யோவான் (புனித மத்,17:1) இவர்களை இயேசு,

1. தனது உருமாற்ற நிகழ்வில் உடன் அழைத்துச் சென்றார் (புனித மாற்கு 9:2)
2. சீமோனின் மாமியார் காய்ச்சலாய் இருந்த இல்லத்திற்குக் கூட்டிப் போனார். (புனித மாற் 1:29-30)
3. யாயீர் என்ற தொழுகைக் கூடத் தலைவனுடைய மகனை உயிரோடு எழுப்ப அவன் இல்லத்தில் நுழைந்தபோது உடன் அழைத்துச் செல்கிறார் (புனித.லூக்8:49-52)
4. கெத்சமனித் தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்க்கும்போது உடன் அழைத்துச் செல்கிறார் (புனித மத் 26:36-37)

இவ்விதமாய் மற்ற திருத்தூதர்களைவிட இந்த மூன்று பேருக்கும் இயேசு முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணங்கள் உண்டு. பேதுருவைத் தான் இயேசு திருச்சபையின் தலைவராக நியமிக்கப்போகிறார் (புனித மத்16:18-19, புனித யோவா 21:15-17) யோவான் அவரது அன்புச் சீடர் (புனித யோவா13:23) அதுபோல யாக்கோபை இயேசு மற்ற இருவரோடு அழைத்துச் செல்லக் காரணம் திருத்தூதர்களில் இவர்தான் முதல் மறைச்சாட்சியாக கொல்லப்பட போகிறார் என்பதால் அக்காலத்தில் ஏரோது அரசன் முதலாம் ஏரோது அக்கிரிப்பா என்பவன் என்றும், இவர் தலை வெட்டுண்டது கி.பி 44ல் என்றும் சரித்திரம் கூறுகிறது. இவரையும் இவரது சகோதரர் யோவானைப் பற்றியும் வேதாகமம் இன்னும் சில தகவல்களையும் தருகிறது.

1. இவர்களது தந்தை செபதேயு, மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டவர். இவர்கள் தொழிலில் அவருக்கு உதவி செய்தனர். (புனித மத்4:21)
2. இவர்கள் சீமோனின் தொழில் பங்காளிகள் (புனித லூக் 5:10)



3. இவர்களுடைய தாய் இயேசுவின் தாய் மரியாவின் சகோதரியாகிய சலோமியாக இருக்கலாம். (புனித மத் 27:56, புனித மாற் 15:40, 16:1) அந்த வகையில் பார்த்தால் இவர் இயேசுவின் உடன்பிறவா சகோதரராக (Cousin) இருக்கலாம்.
4. இவர்கள் இருவரும் (புனித மாற் 10:35) இவர்களது தாயும் இயேசுவிடம் வந்து அவர் ஆட்சி புரியும்போது இவர்களுள் ஒருவன் அவரது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் அவரது இடப்புறமும் அமர வேண்டுமென்று கேட்டவர்கள். மேலும் அவர் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் குடிக்க இயலும் எனக் கூறியவர்கள் (புனித மத் 20:20-22)
5. இயேசுவும் சீடர்களும் சமாரியருடைய ஓர் ஊர் வழியாக எருசலேம் செல்ல முயன்றபோது அவ்வூர் அவர்களை ஏற்றுக் கொள்ளாதபோது யாக்கோபும் யோவானும் இதைக் கண்டு '**ஆண்டவரே வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா?** (புனித லூக் 9:53-54) எனக் கேட்டவர்கள்.
6. இவர்கள் இருவருக்கும் இருந்த இந்த மனநிலை காரணமாகத்தான் ஒருவேளை இவர்களுக்கு **இடியைப் போன்றோர்; என்று பொருள்படும் போவனேர் கேசு;** என்று இயேசு பெயரிட்டார் (புனித மாற் 3:17)

பெரிய யாக்கோபு பிரபலமாவதற்கு, விவிலியத்துக்குப் புறம்பே, யாக்கோபைப் பற்றிய பாரம்பரியமும் காரணம். அவற்றை யுசேபியு, அலெக்சாந்திரா கிளமந்து ஆகிய சரித்திர ஆசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அதன்படி முதல் வேதசாட்சியாக ஸ்தேவான் மரித்த பின்பு (தி.ப.7:54-60) ஜெருசலேமில் திருச்சபை பெரும் இன்னலுக்குள்ளாகியது. (தி.ப 8:1) மக்கள் சிதறடிக்கப்படுகின்றனர். அவர் சென்ற இடங்களில் நற்செய்தியை அறிவித்து வருகின்றனர். (தி.ப 8:4) யாக்கோபு எருசலேமில் தலை வெட்டுண்டு இறப்பதற்கு முன்பு, அன்று ஹிஸ்பானியா என்று அழைக்கப்பட்ட (இன்றைய ஸ்பெயின் நாடு) ஐபீரிய தீபகற்பத்திற்கு வந்து நற்செய்தி அறிவித்தார் என பாரம்பரியம் கூறுகிறது. அந்நேரத்தில் இயேசுவின் தாய் கன்னிமரியாவும் இவர் நற்செய்தி அறிவித்த ஐபீரிய தீபகற்பத்திற்கு பாலஸ்தீன தேசத்திலிருந்து அதிசயமாக விஜயம் செய்து இவரைத் தேற்றினார் என பாரம்பரியம் கூறுகிறது. அன்னை மரியா இங்கு வந்ததற்கு சான்றாக யாக்கோபு பேராலயத்தில் எழுப்பப்பட்ட நினைவுத்தூண் ஒன்றை இன்றும் நாம் காணலாம். ஜெருசலேம் திரும்பிய யாக்கோபு ஏரோதால் கி.பி 44ல் தலைவெட்டுண்டு இறந்தார். (தி.ப 12:2)

இதன்பின்பு இவரது சீடர்கள் இவரது பூத உடலை ஜெருசலேமிலுள்ள பேர்பா (இன்றைய ஹைப்பா) துறைமுகம் வழியாக ஹிஸ்பானியாவிலுள்ள ஐரியா பிளேவியா (Iria Flavia) என்ற கடற்கரை நகரில் கொண்டு சேர்த்தனர். இவர்கள் மத்தியதரைக் கடலை, ஜிப்ரால்டர் ஜலசந்தியைத் தாண்டி யாக்கோபின் உடலை இந்த ஐபீரிய தீபகற்பத்தில் கொண்டு சேர்த்தனர். ஐரியா நகரிலிருந்து ஒரு காளை வண்டியில் ஏற்றி உடலை உள்நாட்டினுள் கொண்டு வந்து லிப்ரேடேர் (Liberecon) என்ற இடத்தில் ஓர் கல்லறையில் வைத்துள்ளனர், அங்கிருந்து சீடர்கள் தொடர்ந்து நற்செய்தி அறிவித்து வந்தனர். அவர்கள் இறந்த பின்பு அவர்களில் தியோடர் மற்றும் அத்தனாசியஸ் ஆகியோர் யாக்கோபின் கல்லறையின் இருபக்கமும் அடக்கம் செய்யப்பட்டனர்.

காலப்போக்கில் இந்தக் கல்லறைகள் பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து கிடந்தன. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலில் அந்நாட்களில் உரோமை அரசின் கீழ் இருந்த நாடுகளில் கிறிஸ்தவர்கள் கடுந்துன்பத்துக்குள்ளாக்கப்பட்டனர். குறிப்பாக ஹிஸ்பானியா உட்பட அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் வேதகலாபனையால் மக்கள் வதைக்கப்பட்டனர். அடுத்து 5ஆம் நூற்றாண்டில் காட்டுமிராண்டிகளின் படையெடுப்பாலும் அதன் பின் 8ஆம் நூற்றாண்டில் 'சான்றியாகோ'...

15ம் பக்கம்

## தலை அரிப்பு தீர வேண்டுமா? இஞ்சி ஹேர் மாஸ்க்!



மருத்துவ குணம் நிறைந்த இஞ்சி, பொடுகு மற்றும் தலையில் ஏற்படும் அரிப்பு ஆகிய பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கிறது. தலை முடியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கிறது.

இஞ்சி உடலில் ஏற்படும் அலர்ஜியை போக்குகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. மருத்துவ குணம் நிறைந்த இஞ்சி, பொடுகு மற்றும் தலையில் ஏற்படும் அரிப்பு ஆகிய பிரச்சினைகளுக்கும் தீர்வளிக்கிறது. இஞ்சியை சருமப் பராமரிப்பிற்கும் பயன்படுத்த முடியும். இஞ்சி சாறை முகம் மற்றும் முடிக்கான மாஸ்க்காக பயன்படுத்த முடியும். தலை முடியில் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் தீர்வளிக்கிறது. இஞ்சி சாறு பொடுகு, தலை முடி உதிர்தல் மற்றும் அரிப்பு நீக்கவும் பயன்படுகிறது.

இஞ்சியை எடுத்து பொடி பொடியாக வெட்டியோ அல்லது துருவி தண்ணீர் ஊற்றி மிதமான சூட்டில் அடுப்பில் கொதிக்க விடவும். சிறிது நேரத்தில் தண்ணீரில் நிறம் மாறத்தொடங்கும். மென்மையான மஞ்சள் நிறத்தில் மாறியிருக்கும்.

அடுப்பை அணைத்து விட்டு, இஞ்சி சாறை நன்றாக பிழிந்து வடிக்கட்டி தனியே எடுத்து வைக்கவும்.

இஞ்சி சாறு நன்றாக சூடு தணிந்த பின் சின்ன ஸ்பிரே பாட்டிலில் ஊற்றி, நேரடியாக தலை முடியின் வேர்கால்களில் படும்விதமாக பயன்படுத்தவும்.

அரை மணி முதல் ஒரு மணிநேரம் வரை இருந்து, சம்பு போட்டு, மென்மையாக கழுவவும். இந்த ஹேர்மாஸ்க்கை வாரம் ஒரு முறை பயன்படுத்துவது நல்லது. இதனால் பொடுகு குறைந்து தலை அரிப்பும் குறைந்து விடும்.

**அன்றாடம் தலைக்கு எண்ணெய் வைத்து மசாஜ் செய்வதும் மிகவும் அவசியம்.**

## மருத்துவ டிப்ஸ்

☆ கருப்பட்டி சாப்பிட்டு வந்தால் உடலில் எலும்புகள் வலுப்பெற்று எலும்பு தேய்மானம் போன்றவை ஏற்படாமல் காக்கும்.

☆ கருப்பு உளுந்தை கொண்டு செய்யப்படும் உணவுகளை குழந்தைகளுக்கு அடிக்கடி உண்ணக் கொடுப்பதால் ரத்த சோகை ஏற்படாது.

☆ இரண்டு ஏலக்காயை தோல் நீக்கி வாயில் போட்டு மென்றுவிட்டு இரண்டு நிமிடம் கழித்து வெந்நீர் பருகினால் இருமல் கட்டுப்படும்.

## புரதம் நிறைந்த பச்சை தோசை!

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்க புரதம் நிறைந்த கிரீன் தோசையை காலையில் சாப்பிடலாம். இந்த தோசையை செய்வது எப்படி என்று பார்க்கலாம்.


**தேவையானவை :**

பச்சைப்பயறு - 1 கப்.
சினன வெங்காயம் - 5.
காய்ந்த மிளகாய் - 2 .
பூண்டு - 2.
சீரகம் - 1 டீஸ்பூன்.
முந்திரி - 3.
உப்பு - சிறிதளவு.

**செய்முறை :**

பச்சைப்பயறை இரவே நன்றாக கழுவி தண்ணீரில் ஊறவைத்து கொள்ள வேண்டும். காலையில் ஊறவைத்த பச்சைப்பயறை மிக்ஸியில் போட்டு அதனுடன் சின்ன வெங்காயம், காய்ந்த மிளகாய், பூண்டு, சீரகம், முந்திரி, சிறிது உப்பு சேர்த்து நன்றாக அரைத்து கொள்ளவும். தோசை மாவு பதத்துக்கு மாவை கரைத்துக் கொள்ளவும். தோசை கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் மாவை தோசைகளாக ஊற்றி இருபுறமும் எண்ணெய் விட்டு சுட்டு எடுக்கவும்.

**சத்தான பச்சை தோசை ரெடி. தக்காளி சட்னி, வெங்காய சட்னியுடன் தொட்டு சாப்பிட பொருத்தமாக இருக்கும்.**



## 05 குருக்களுக்காக...

மனைவியின் நான்கு சகோதரிகளும் அருட்சகோதரிகளாய் மாறினர். அவனும் தனது வாழ்வில் வளம் நலம் யாவும் கண்டு தனது வயோதிகப்பருவம் வரை வாழ்ந்திருந்தான். குருக்களின் படிப்பிற்காக யார் யாரெல்லாம் உதவ முன்வருகின்றனரோ அவர்கள் இன்னும் அதிகமதிகமாய் பெற்றுக் கொள்வர். ஒரு உத்தம குருவை இறைவனுக்கு காணிக்கையாக்குவதை காட்டிலும் யாதொரு நன்மையும் செய்வதற்கில்லை. குருவைத் தவிர வேறு யாராலும் இறைவனை மாட்சிமைப்படுத்த இயலாது.

## 04 உன்னை நான்...

நிற்கும்போது, கருவறைக் குழந்தைகள் மகிழ்ச்சியால் கும்மாளம் போடுவது எப்படி முடியும். பேருவகையில் எப்படித் துள்ளிக் குதிக்க முடியும். கருவறையையே சிசுக்களின் கல்லறைகளாக்க இன்று பலர் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றபோது கருவறையை மரணக்குழி என்று கூறுவதைவிடுத்து சிசுக்களின் சிங்காரத்தொட்டில் என்று எப்படிக் கூறுவது.

வயது முதிர்ந்த எலிசபெத் கருவுற்ற செய்தி அறிந்து அவருக்கு உதவிசெய்ய மரியா யூதா மலைநாடு நோக்கி விரைந்தார். மரியாவின் கால்களை விட அவரது உள்ளம் எலிசபெத்தின் இல்லம் நோக்கி வெகு வேகமாகப் பயணம் செய்தது. மரியாவும் எலிசபெத்தும் சந்தித்தபோது எலிசபெத்தின் உதிரத்தில் குழந்தை அக்களிப்பால் துள்ளிற்று. மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது தூய ஆவியால் எலிசபெத்தின் உள்ளம் நிறைந்தது. எலிசபெத்தின் வாழ்த்தை மரியா கேட்டதும் மரியாவின் உள்ளமும் பேருவகை கொண்டு இறைவனைப் புகழ்ந்து பாடியது. 'என் ஆன்மா இறைவனையே ஏற்றிப்போற்றி மகிழ்கிறது' என்று அருமையான இறைபுகழ் பாடல் நமக்குக் கிடைத்தது.

மரியா - எலிசபெத் ஆகிய இருவரின் மனநிறைவும், இயேசு - திருமுழுக்கு யோவான் ஆகிய இருவரின் பேருவகையும், நம்மில் இருந்தால் இறை - மனித உறவு துளிர்க்கும். நம் சந்திப்புக்களில் இவர்கள் இருந்தால் மனித - மனித உறவு பலப்படும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.....

## 14 ஒளி வீசும் விண் மீன்

என்ற சொல் ஆங்கிலத்தில் செயின்ட் ஜேம்ஸ் அதாவது புனித ஜேம்ஸ் (யாக்கோபு) என்பதிலிருந்து கம்போஸ்டெல்லா என்ற பதம் 'நட்சத்திர நிலம்' (Field of Stars) என பொருள் கொடுக்கும் 'காம்பஸ் ஸ்டெல்லே" (Campus Stellae) என்ற லத்தீன் பதத்திலிருந்தும் வருகின்றன. அந்தக் குறிப்பிட்ட இடத்தில் பிரகாசமான விண்மீன் போன்ற ஒளி தோன்றியமையால் கம்போஸ் டெல்லா என அது பெயர் பெற்றது. யாக்கோபின் கல்லறையை இன்றும் பார்க்கலாம். கல்லறையை உள்ளடக்கிய ஆலயம் இருக்கும் பகுதி கம்போஸ்டெல்லா என்றழைக்கப்படுவதால் அதைச் சுற்றியிருக்கும் நகரையும் இன்று கம்போஸ்டெல்லா நகரம் என அழைக்கின்றனர்.

## 01 இளைய தலை...

மாணவர்கள், பெற்றோரிடம் அவர் தொடர்ந்து கூறிய துணை ஆயர், நாட்டுக்கு மொழி என்பது அந்நாட்டுடன் தொடர்புக்கான வழியாகும். மறுபுறம் நாட்டின் சக்தியாகும். உயர செல்ல ஊன்றுகோலாகவும், ஒரு நிலையிலிருந்து இன்னுமொரு நிலைக்குச் செல்லும் வழியமைக்கும் ஏணியாகவும் உள்ளது.

அக்குவயினஸ் உயர் கல்வி நிலைய வருட அறிக்கையை அருட்தந்தை சுசில் சில்வா அடிகளாரினால் முன்வைக்கப்பட்டது. டிப்ளோமா சான்றிதழ்களும் துணை ஆயரினாலும் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை பிளசிடஸ் த சில்வா அடிகளாரினாலும் வழங்கப்பட்டன. அக்குவயினஸ் கல்வியகத்தின் துணை இயக்குனர் ரேமன்ட் சமரகோன் பொருளாளரான அருட்தந்தை பர்கும் பர்னாந்து செயலாளர் பிரியங்கர சில்வா உட்பட காரியாளயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

தகவல் : T. சுனில் பர்னாந்து

### 66ம் பிறந்தநாள் ஞாபகார்த்தம்



மாஜி மக்டலின் பர்னாந்துபிள்ளை

23 ஜூலை 1953

அன்புடன் நினைவுகூர்வது கணவன் சிங்கராயர் (மாரியோ), மகள்மார் மலிஷா மற்றும் சத்யா (17882)

## 10 விவிலிய...

56. பல மடங்கு விளைச்சல் (4:8)
57. இயேசு (4:11)
58. இறைவார்த்தைகளை (4:14)
59. மக்களிடம் (4:14)
60. முளைத்துத் தானாக வளரும் விதைக்கு
61. ஒப்பிட்டு கூறினார் (4:27)
62. வானத்துப் பறவைகள் (4:32)
63. சீடர்களுக்கு (4:34)
64. சீடர்களுடன் (4:35-36)

## 05 சூழலை வெல்வோர்...

குடும்பத்திற்குள் (யோவா 2:1-11), பள்ளிக்குள் (லூக் 2:15-48), கோவிலுக்குள் (யோவா 2:13-22), சமூகத்திற்குள் (மத் 14:13-21), அரசியலுக்குள் (யோவா 19:1-11), இளையோர் அமைப்புக்களுக்கும் இந்தச் சக்தி வாக்களிக்கப்பட்டுள்ளது. இளையோர் உயிர்ப்பின் உந்து சக்தியால் உலகையே வெல்கின்றனர்.

### 14. வெற்றிக் கீதம்

எனவே இளையோர் இயேசுவோடு இணைந்து அவரது உயிர்ப்பினால் ஆற்றல் பெற்று உலகை வெல்வோம் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இறந்த ஏன் உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப் பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ (உரோ 8:34)

எனவே சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது, சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? ஆகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி என்று பாடுவோம்.

## 03 நீங்கள், நீங்களல்ல...

ஆனால் துர்அதிஷ்டவசமாக போதனை, நீதி, நிர்வாகம், சமூகச் செயற்பாடுகள் அனைத்திலும் குருக்கள், துறவிகளின் அதிகாரப்போக்கு இன்னும் காணப்படுகின்றது. இந்நிலை நீடிக்க முடியாது. குருக்கள், துறவிகள் பொதுநிலையினரோடு கைகோர்க்க வேண்டும்.

(இ) திருமுழுக்குப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் புனிதப்படுத்தும் பணி, இறைவாக்கு உரைக்கும் பணி, வழிகாட்டும் பணி ஆகிய மூப்பெரும் பணிகளில் பங்கேற்கின்றனர். எனவே, பழைய சிந்தைகளின் விளைவாகக் காணப்படும் குருக்கள், துறவிகளின் உயர்வு மனப்பான்மையும் பொதுநிலையினரின் தாழ்வுமனப்பான்மையும் களையப்படவேண்டும்.

(ஈ) ஆண்டாண்டு காலமாக குருக்கள், துறவிகளை சார்ந்து வாழ்ந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ பொதுநிலையினர் இன்னும் குருக்கள், துறவிகளை கூடுதலாக சார்ந்து வாழும் மனப்பாங்கைக் கொண்டு உள்ளனர். இந்நிலை மாறவேண்டும். இல்லையேல் பொதுநிலையினர் குழந்தைகளாகவே இருப்பர்.

### ஈற்றில்...

இயேசு இறைத்தந்தையின் அருளடையாளமாகச் செயல்பட்டார். திருச்சபை இறைஇயேசுவின் அருளடையாளமாக செயல்பட்டு வருகிறது. உலகில் திருச்சபை முழுமையும் இறையரசின் பணியாள் என்ற உணர்வு இறைமக்கள் சமூகம் முழுமைக்கும் ஏற்படும் பொழுது பேதங்கள் மறையும், வேறுபாடுகள் களையும், ஏற்றத்தாழ்வுகள் தகர்ந்துபோகும். இறையரசு உலகை ஈடேற்றும். அப்பொழுது எம் குருக்கள் துறவிகள் கிறிஸ்துவாக உருமாற்றம் பெறுவார்கள்.

### புனித பேதுரு (1பேதுரு 5:2)

இவ்வழைப்பு இன்றும் குருக்கள், துறவிகளுக்கு பொருந்தும். மேலும் யோவான் 15:6 என்று இயேசு கூறுகின்றார். ஆகவே குருக்கள் துறவிகள் இறை அழைப்பை மனித சுதந்திரத்துடன் ஏற்று இப்பணிதனை உள உவப்புடன் ஆற்றும்பொழுது அது குருத்துவ, துறவு அழைப்புக்கு அழகு சேர்ப்பதாக அமையும். உள உவப்புடன் பணி செய்யும்போது மன இறுக்கம் இராது. இதனால் நோய்கள் வராது. வெற்றி, தோல்வி வந்த போகும். மகிழ்ச்சி, துன்பம் கலந்து வரும். ஆனால் சோர்ந்து போகமாட்டோம்.

## 12 இறை ஊழியர்...

விவரங்களையும், புனிதர் மற்றும் அருளாளர் நிலைகளுக்கு உயர்த்துவதற்கென, எட்டுப் பேரின் வீரத்துவ புண்ணியப் பண்புகள் குறித்த விவரங்களையும் சமர்ப்பித்தார். Braga பேராயராகப் பணியாற்றிய அருளாளர் பர்த்தலோமேயு அவர்கள், போர்த்துக்கல் நாட்டுத் தலைநகர் லிஸ்பனில், 1514ம் ஆண்டு வைகாசி 3ம் திகதி பிறந்து, அந்நாட்டின் Viana do Casteloவில், 1590ம் ஆண்டு ஆடி 16ம் திகதி இறைபதம் எய்தினார்.

ஓர் அருளாளர், புனிதர் என அறிவிக்கப்படுவதற்கு, அவரின் பரிந்துரையால் குறைந்தது ஒரு புதுமை நிகழ்ந்திருக்க வேண்டும், ஆயினும், காலம் காலமாக, அந்த அருளாளர் மீது விசுவாசிகள் கொண்டிருக்கும் பக்தி காரணமாக, திருத்தந்தை, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவரைப் புனிதர் பட்டியலில் இணைக்கும் முறை திருஅவையில் நிலவி வருகிறது (canonizzazione equipollente). மேலும், அமெரிக்க ஐக்கிய நாட்டு El Paso in Illinois நகரில் 1895ம் ஆண்டு, மே 8ம் திகதி பிறந்து, நியு யார்க் நகரில், 1979ம் ஆண்டு டிசம்பர் 9ம் திகதியன்று இறந்த, வணக்கத்துக்குரிய இறை ஊழியர் ஃபுல்டன் ஜான் ஷீன் (Fulton Sheen) அவர்களின் பரிந்துரையால் ஒரு புதுமை நிகழ்ந்துள்ளது.

பேராயர் ஃபுல்டன் ஷீன் அவர்கள், தனது மறையுரைகளுக்காக, குறிப்பாக தொலைக்காட்சி மற்றும் வானொலியில் நிகழ்த்திய மறையுரைகளுக்காக மிகவும் அறியப்படுகின்றவர். லெபனான் நாட்டு முதுபெரும் தந்தையும், மாரனைட் திருக்குடும்ப அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவருமான Elia Hoyek (1843-1931) இத்தாலியின் Reggio Calabria-Bova பேராயரும், Somasca குருக்கள் சபையைத் தொடங்கியவருமான Giovanni Vittorio Ferro (1901-1992) ;

இஸ்பெயின் நாட்டின் Tudela அப்போஸ்தலிக்க நிர்வாகத்தின் துணை ஆயரும், பிறரன்பு மறைபோதகர்கள் சபையை நிறுவியவருமான Angelo Riesco Carbajo (1902-1972)

போலந்து நாட்டின் மறைமாவட்ட அருள்பணியாளர் Ladislao Korniłowicz (1884-1946) ;

இத்தாலியின், ஆண்டவரின் பிரான்சிஸ்கன் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவரும், கப்புச்சின் சபையைச் சார்ந்தவருமான Angelico Lipani (1842-1920);

பிலிப்பீன்ஸ் நாட்டின், சியன்னா புனித கத்ரீன் தொமினிக்கன் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்த Francesca dello Spirito Santo (1647-1711);

பிரான்ஸ் நாட்டின் பிறரன்பு தாய்மை அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்த, பொதுநிலை விசுவாசி Stefano Pietro Morlanne (1772-1862) ஆகிய ஏழு இறை ஊழியர்களின் வீரத்துவப் புண்ணியப் பண்புகளையும் திருத்தந்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

## 09 நீங்கள் நீங்களல்ல,...

மாரிபோல் இயேசுநாதர். எளியமனத்தோர் பேறுபெற்றோர் என்று எடுத்ததும் அவர் சொன்னார் இதில் எளிமை என்பது பற்றில்லாமை! இறைவனை நம்புவதே! வளமிகு செல்வம். மனையாள் சொந்தம். வரவினை எண்ணாது, ஒரு வஞ்சமில்லா நெஞ்சத்தோடு, பிறர் பலி சொல்லாது, விளம்பிய வேதம் வகுத்தது போல வாழ்பவர் இவராவர். அந்த விண்ணரசென்றும் இவருக்குரியது. அடைபவர் இவராவர். அந்த எட்டுப் பேரின்ப வார்த்தைகளில் முதல் வார்த்தை இதுவே. இது நம் அனைவரையும் மறு கிறிஸ்துவாக வாழவிடுக்கும் அழைப்பு.

பன்னிரண்டு சீடரையும் பக்கத்திலே நிற்கவைத்து தன்னறிவை அள்ளிக் கொடுத்தார். இதில் இன்னவழி பேய்விரட்ட, இன்னவகை நோய்தீர்க்க என்பதனை சொல்லி முடித்தார். சக்தியை பகிர்ந்து கொண்ட உத்தமர்க்கு மேலும் சில தத்துவங்கள் அள்ளிக் கொடுத்தார். நீங்கள் பெற்றுக்கொண்ட செல்வமிதைப் பெற்றதுபோல், இலாபமின்றி மற்றவர்க்குத் தாருங்கள் என்றார்.

காசு பணம், தங்கநகை, கையடக்கபெட்டியேதும் தேவையில்லை உங்களுக்கென்றார். நீங்கள் சேவை தரும் ஊதியத்தில் வாழ்வதற்கு சாப்பிடுங்கள். வேறு வழி வேதனை என்றார். எவ்விடத்தில் உங்கள் மொழி ஏற்கவில்லையோ அதனை அவ்விடத்தில் விட்டுவிடுங்கள். நீங்கள் செல்லுமிடத்தில் ஓட்டிவந்த சின்னஞ்சிறு தூசிகளும் தேவை இல்லை தட்டிவிடுங்கள்.(லூக்கா:9:1.6)

நித்திய குருவாகிய இறைவா! உமது பணியை நிறைவேற்றவும் உமது வழியில் மக்களை வழிநடத்தவும் எம் குருக்கள், துறவிகளை நீர் தாமே வழிநடத்துவீராக. குருத்துவத்தில், துறவறத்தில் இணைந்த இவர்கள் வாழ்வு உமது திருவாழ்வுக்கு இணைந்ததாக அமைய, இவர்கள் அனைத்து மக்களுக்கும் முன்மாதிரியாக அமைவதாக. உமது பார்வையில் இருந்து இவர்கள் ஒருபோதும் விலகாதிருக்கும் பொருட்டு உமதுகரங்களில் அவர்களைத் தாங்கிக்கொள்ளும்.

அருட்தந்தை. ச. சவுல்நாதன்,
பாப்பிறை மறைபரப்பு சபைகள்,
மன்னார் மறைமாவட்ட இயக்குனர்.

## 13 ஓர் இனிய உதயம்

"யார் முடங்கிக் கிடக்கணும். மாதாவை தரிசிக்க ஆசைப்படற எங்க அத்தை எந்த நிலையில் இருந்தால் என்ன? என் உயிருக்குயிரான கணவரின் அன்னை அல்லவா! அவர்கள் ஆசையை நிறைவேற்றுவதில் என்ன சிரமம்?" முக்கை அறுத்த மருமகளின் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்ட மாமியார் "என் மருமகள், எத்தனையோ மகளுக்கு சமமானவ. அந்த மாதா எனக்குத் தந்த பரிசு" என்று மனம் நெகிழக் கூறினாள்.

"விமலா எப்ப முதியோர் இல்லத்துக்கு போகணும். நான் அலுவலகத்தில் விடுப்பு எடுக்கணும்" சோகமாகக் கேட்டான் லாரன்ஸ். "வேண்டாங்க. உங்க அம்மா அப்பா போக வேண்டாம். நம்மோடே இருக்கட்டும்" என்று மனைவி கூறியதும் லாரன்ஸின் உள்ளம் சக்கர நாற்காலி குடும்பத்தை வாழ்த்தியது.

வாம்மா ஜெயா! வேலைக்குப் போய்ட்டு களைச்சுப் போய் வர்றியே. இந்தா சூடா காபி போட்டு வச்சிருக்கேன்" என்று மருமகளை வரவேற்றாள் சவுந்தரி.

"Nobleness Enkindleth Nobleness" என்பதுபோல ஒரு குடும்பத்தின் நற்செயல் மற்ற குடும்பங்களில் நற்செயல்கள் இனிய உதயம் பெறத் தூண்டியது.

எமது இணையத்தள முகவரி
http://www.colomboarchdiocesancatholicpress.com




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ).
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

### திருமண சேவைகள்



- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.

### தொடர்புகொள்ளுங்கள்


இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com



பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்





| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |





அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்